பாரத மணி

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 28-1-40 பிரமாதி௵ தை௴ 15உ	முத்து 12

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
அரசியல் நிர்ணய சபை		342
போகிற போக்கில்		344
உலக வர்த்தமானம்		347
ஆசிரியருக்குக் கடிதம்		348
ஸ்டாலின் கொள்கை	த. கிருஷ்ணமூர்த்தி	349
வறுமையுள்ளம்	கு. பா. வெங்கடாசலம்	351
அந்த வீடு	மாலதி	352
கைராட்டை	ராஜலக்ஷ்மி	356
வேலையில்லாதவன்	“அமுதன்”	358
சிறுவர் பகுதி	வீ. வீ. பத்மராஜன்	362

“பாரத மணி” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; எவரையும் குறிப்பிடுவனவல்ல

அரசியல் நிர்ணய சபை

பம்பாயில் வைஸ்ராயின் பிரசங்கத்தின் சாராம்சத்தை கால தாமதமன்னியில் செயலுக்கு கொண்டுவரும்படி செய்வது நமது தலைவர்களின் முதற் கடமை. குளிர்காலம் விலகியதும் மேல் நாட்டில் இன்னும் இரண்டு மாதத்திற்குள் காட்டுத் தீயைப்போல் யுத்தம் வலுத்துப் பரவுமென்பதில் ஐயமில்லை. ஆற்பாட்டங்களும், குறிகளும் நாளுக்கு நாள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்குள் நமது அரசியல் நிர்ணயங்களை பிரிட்டிஷ் சர்க்காரோடு கலந்து செயல் ரூபமாய் ஒரு தீர்மானத்திற்கு கொண்டு வரவேண்டிய தவசியம்.

வைஸ்ராயும் மகாத்மாவும்

வைஸ்ராயின் பிரசங்கத்தில், மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறபடி ஓர் சமாதானத்திற்கு வேண்டிய பொருத்தங்கள் இருக்கின்றன. அவைகளை இந்த சமயத்தில் செயலுக்குக் கொண்டுவராவிட்டால் யுத்தம் முடிவடைந்த பிறகு செயலுக்குகொண்டு வருவது மிக்க சிரமசாத்யம். வித்து முளைத்துப் பயிராவதற்கு அவசியமான சீதோஷ்ணஸ்திதி இந்த நெருக்கடி சமையத்தில்தான் இருக்கிறது. இந்தியாவின் அரசியல் கோரிக்கை டொமினியன் பதவி என்று ஒப்புக் கொண்டால் மாத்திரம் போதாது. டொமினியன் பதவி 'நடக்கவும்' இப்பொழுதே ஆரம்பித்து விடவேண்டும். அப்பொழுதுதான் ஒற்றுமைக்கு சேர வேண்டிய இசைகள் சேரும். இந்த ஜனநாயக சண்டையில் இந்தியாவும் பூர்ண மனதுடன் கலந்து கைங்கர்யம் செய்ய முடியும். ஆகையால் காலதாமதமின்றி மகாத்மா காந்தியும் வைஸ்ராயும் சந்தித்து டொமினியன் பதவியை இப்பொழுதே அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய சரியான வழிகளைத் தேடவேண்டும்.

சர்க்கார் ஆதரவிலேயே, காங்கிரஸ் கோரிக்கை பிரகாரம், ஓர் அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுப்பது ஓர் முக்கிய வழியாகும். இந்த நிர்ணய சபை கூடியவுடன் அது ஒரு அட்ஹாக் கமிட்டி (Ad hoc Committee) நியமிக்கவேண்டிய தவசியம். இந்தக் கமிட்டிதான் டொமினியன் பதவியை ஊட்டி இந்தியாவிற்கு ஒரு அரசியல் திட்டத்தை செய்துக் கொடுக்கவேண்டும். இதை பார்லிமென்ட் வழக்கன்னியில் ஆமோதிக்க வேண்டும். இதுதான் சமாதானத்திற்கும், ஜனநாயக வளர்ச்சிக்கும் நேர்வழி. நியாய வழி.

அரசியல் நிர்ணய சபை

இதைத் தேர்ந்தெடுக்கும் வகையில் நாம் சில பயனுள்ள வழிகள் கூறலாமென்று எண்ணுகிறோம். (1) ஐயாயிரம் ஜனத்தொகை உள்ள கிராமங்களை ஓர் பஞ்சாயத்து பகுதியாக நிர்ணயம்செய்து வகுத்து, ஆயிரம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதியாக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்தலை (Universal Adult Franchise) சர்வ யுவ ஓட்டுரிமை முறை பிரகாரம் நடத்தினால் பலன் உண்டு. தீங்கில்லை. இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்து பிரதிநிதிகளை ஒரு 'எலக்டோரல் காலேஜா'க (Electoral College) செய்து, சௌகரியம்போல் தொகுதியாகப் பிரித்து இவர்கள் மூலம் அரசியல் நிர்

ணய சபையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்தத் தேர்தலில் தனித்தொகுதியே கூடாது. மைனாரிட்டிகளைக் காப்பாற்ற நியாயமாய் கிடைக்கவேண்டிய இடங்களை கூட்டுத்தொகுதியிலேயே அமைக்க வேண்டும். சக்கரத்தின் ஓட்டத்திற்கு சரியான வட்டை எவ்வளவு அவசியமோ, அப்படியே நமது சட்ட சபைகளுக்கு கூட்டுத்தொகுதி அவசியம். இல்லாவிட்டால் இந்தியா அரசியல் கட்டை வண்டி, நமது கொடியுள்ள கிராமப் பாதையில் நிச்சயம் கொடைசாய்ந்துவிடும். சந்தேகமேயில்லை.

இந்த நிர்ணய சபைக்கு பிரிட்டிஷ் இந்தியாவும், சமஸ்தானங்களும் சேர்ந்து பிரதிநிதிகள் அனுப்ப வேண்டியதவசியம்.

அட்ஹாக் கமிட்டி

இப்படி கூட்டப்பட்ட அரசியல் நிர்ணய சபை, டொமினியன் பதவி சட்டத்தை தானாகவே ஒவ்வொரு விவரங்களையும், சாக்ஷி விசாரித்து நிர்ணயம் செய்ய சக்தி வாய்ந்ததாய் இராது. ஆகையால் இந்த நிர்ணய சபை கூடினதினமே ஒரு அட்ஹாக் கமிட்டியை தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அட்ஹாக் கமிட்டியில் ஐந்துவித ஸாதகங்களை யுத்தேசித்து திறமை வாய்ந்தவர்களுக்கு அவசியம் இடம் கொடுக்க வேண்டும். பிரதிநிதிகளைப் பார்த்துப் பொறுக்க வேண்டும்.

1. அரசியலில் தேர்ச்சியடைந்த பிரமுகர்கள். 2. மந்திரி பதவி அல்லது திவான் பதவி பெற்று அனுபவமுள்ள பிரமுகர்கள். 3. அரசியலில் தீர்க்கதரிசிகள், (Scholars & Thinkers) 4. ஹைகோர்ட்டு, பெடரல் கோர்ட்டு ஜட்ஜ் பதவி வகிப்பவர்கள். 5. அரசியல் சட்டதிட்டத்தில் நிபுணர்கள்.

ஜாதிமத பேத மன்னியில், திறமையையே கண்ணாக எண்ணி அட்ஹாக் கமிட்டி பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

எக்ஸிகுடிவ் கவுன்ஸில்

மேற்கண்ட சபையையும், கமிட்டியையும், தீவிர ஊக்கத்துடன் வேலை செய்தால், மூன்று மாதத்திற்குள் தேர்ந்தெடுத்து அமுலுக்கு கொண்டுவந்துவிடலாம். பார்த்தால் மலைபோலிருக்கிறது. வேலை செய்ய ஆரம்பித்தால் பனிபோல் விலகிவிடும். அதற்குள் மேற்கண்ட தொண்டுகளை துரிதப்படுத்துவதற்கும், மாகாண ஆக்ஷியை சரிவர நடத்துவதற்கும், வைஸ்ராயின் எக்ஸிகுடிவ் கவுன்ஸிலை பெரிதாக்க வேண்டியதவசியம். குறைந்த பக்ஷம் பாதிக்குப் பாதியாவது நமது அரசியல் தலைவர்களை கௌன்ஸில் மெம்பர்களாக நியமிக்க வேண்டும். அப்படி நியமித்து இவர்கள் கையிலேயே பொக்கிஷத்தையும், பாதுகாப்பையும் ஒப்புவிக்க வேண்டும்.

இந்த மூன்றுவித ஏற்பாடுகளுக்கும் பிரிட்டிஷ் மந்திரி சபையும், வைஸ்ராயும் உடனே இணங்கினல்தான், வைஸ்ராயின் பம்பாய் பிரசங்கத்தில் ஆர்வமும் உண்மையும் உண்டென்று நாம் எண்ணலாம்.

புதிதாய் நிர்மாணம் செய்யப்பட்ட ஓர் அரசியல் நிர்ணய சபையன்னியில் டொமினியன் பதவியை இந்தியாவின் சார்பாக ஏற்றுக்கொள்ளவோ, விதிக்கவோ, விவரங்களைக் குறிக்கவோ, மாற்றவோ, ஒருவருக்கும் அதிகாரமில்லை. இது உண்மை. நியாயவழி வேறு இல்லை.

கே. எஸ். வேங்கடரமணி

நான் தமிழ் பத்திரிகை ஆரம்பித்தது முதல் "பாரதமணி"யில் டாக்டர் ரங்காச்சாரியாரைப் பற்றி எழுத வேண்டுமென்ற அவா கொண்டிருந்தேன். நான் அவரிடம் மிகவும் நெருங்கிப் பழகினவர்களில் ஒருவனாய் இருக்காவிட்டாலும் அவரை எப்பொழுதும் கண்டு களித்தவர்களில் ஒருவன்.

கருட பகவானை ஆகாயத்தில் கண்டவுடன் சற்று நின்று நாம் தரிசிப்பது போல், பாதசாரியாகிய நான் அவர் ரோல்ஸ்ராயைக் கண்டவுடன் சற்று நின்று சலாம் போடுவது வழக்கம். எவ்வளவு வேகமாய் போய்க் கொண்டிருந்தாலும் எப்பொழுதும் மறக்கக்கூடாத புன்சிரிப்பால் பதிலளிப்பார். இந்த அபிமானத்தை எப்பொழுதாவது சமயம் நேர்ந்தால் பூர்த்தியும் செய்வார். அதாவது ஒரு காலை காரில் வைத்துக்கொண்டு இரண்டு நிமிஷம் பேசுவார். இந்த சமயத்தில் சிலவேளைகளில் நாங்கள் இருவரும் வேதாந்தம்கூட பேசுவதுண்டு.

"சுவாமி, எங்கு இருக்கிறார்?" என்று தேடும் புத்தியும், உணர்ச்சியும், தத்துவ விசாரணை பரப்பரப்பும் அவருக்கு எப்பொழுதும் உண்டு. டாக்டர் தொழிலை யோகாப்யாச முறையாகவே நடத்தி வந்தார். ஆத்ம ஞானத்தை நேரிட்டு தேடாவிட்டாலும், தன் சக்தியை பரிபூரணமாக வெளியிட்டு பரோபகாரம் செய்வதிலே ஊக்கமாயிருந்தார்.

* * *

பம்பாயிலிருந்து ஸென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கியவுடன் வழக்கம்போல் நான் கூவம் நதியை தரிசித்தேன். மூன்று மாதத்திற்குள் சென்னையில் ஒருவித மாறுதலும் என் கண்ணுக்கு புலப்படவில்லை. பழய சாக்கடையைக் கண்டு சற்று சலித்து கொஞ்சம் கிழக்கே நோக்கி ஜெனரல் ஆஸ்பத்திரி பக்கம் பார்த்தேன். ஓர் புது சிலையைக் கண்டேன்.

என்னடா, லார்ட் ரிப்பன் சிலை, மௌண்ட் ரோடிலிருந்து இவ்விடம் ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கும் காரணம் என்னவென்று வியந்தேன். சென்னை ராஜதானியில் ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் க்ஷீணித்து நோயடைந்து இருக்கிறதே, அதற்கு மூல புருஷரான லார்ட் ரிப்பன் துரைக்கு சிகிச்சை செய்தால் ஒருகால் ஸ்தல ஸ்தாபனங்கள் (Local Bodies) முன்னேற்றமடையலாம் என்றோ? கொஞ்சம் உற்றுப் பார்த்தேன். தாடியைக் காணோம். ஆஸ்பத்திரியாச்சே, சிக்கில் தாடியை க்ஷவரம் செய்துவிட்டார்களோவென்று வியந்தேன். சிலை என்னும் ஞாபகம் உடனே வரவில்லை. இன்னும் கொஞ்சம் கிட்டப்போய் பார்த்தேன். புன்சிரிப்பின் அழகில் அமைந்த சிலை டாக்டர் ரங்காச்சாரியார்போல் தோன்றிற்று. நெபோலியனைப்போல் பின் கூப்பியிருக்கும் கைகளில் 'ஸ்டெதாஸ் கோப்பை'ப் பார்த்தேன். டாக்டர் ரங்காச்சாரியென்று தீர்மானித்தேன். என் களிப்பிற்கு கங்கு கரையே இல்லை.

நல்ல இடம் கிடைத்தது—இறந்த பிறகு கூட டாக்டருக்கு. சென்னை அரசியல் குழப்பத்தில் சிலைகளுக்கு தக்க இடம் யார் கொடுக்கிறார்கள்? தமிழ் நாட்டில் உத்தமனாய்ப் பிறந்த மணி ஐயர்வாள் சிலை பட்ட அவஸ்தை எனக்குத்

தெரியுமே! ஜட்ஜ முத்துஸ்வாமி ஐயர் வாளுக்கு ஹைகோர்ட்டில் அமைந்தது போல் டாக்டர்ரங்காச்சாரியாருக்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் இடம் கிடைத்தது தகுதி. உத்தமம். நமது கடமையை நாம் ஒருவாறு செலுத்திவிட்டோம். இந்த உத்தமனுக்கு இந்த இடத்தை கொடுத்தவர்களுக்கும், கொடுக்கும்படி செய்தவர்களுக்கும் என்மனமார்ந்த வந்தனம்.

நான் ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்குப் போனவுடனே டாக்டரை பற்றி "போகிற போக்கில்" எழுத வேண்டுமென்று எண்ணினேன். அந்த பாக்கியம் இந்த வாரத்திற்குத்தான் கிடைத்தது. உமியை மெல்லும் வாய்க்கு கொஞ்சம் அவல் கிடைத்தால் பாக்கியம்தானே.

* * *

சென்ற வாரம் "பாரதமணி"யில் டாக்டர் ரங்காச்சாரியாருடைய போட்டோ வந்தசமயத்திலே, நான் இந்த குறிப்புகளை எழுதியிருக்க வேண்டும். ஆனல் எனக்கு ஆசிரியர் பதவியில் ஒரு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. நமது வைஸ்ராய், நாம் இஷ்டப்பட்டபடி செய்ய விடுகிருரா?

நமது அரசியல் நோக்கத்தைப் பற்றி பம்பாயில் ஓர் உயர்தர பிரசங்கம் செய்துவிட்டார். அந்தப் பிரசங்கத்திலேயே சென்ற வாரம் நான் ஆழ்ந்து நின்றேன். 'என்னடா, நமது வைஸ்ராய்கூட—நெவில் சேம்பர்லின், வின்ஸ்டன் சர்ச்சில் ஆக்ஷிக்கு உள்பட்ட வைஸ்ராய் கூட—நமது விஷயத்தில் இவ்வளவு தூரம் ஈவு, இறக்கம் வைத்து நம்மைத் தட்டிக்கொடுத்து 'தாஜா' செய்து பொடி வைக்காமல் கூடியவரையில் தெளிவாய் அரசியல் நோக்கங்களைக் குறித்து பிரசங்கம் செய்திருக்கிருரே' யென்று திடுக்கிட்டேன். சிந்தையில் ஆழ்ந்தேன்.

யுத்த நெருக்கடி வலுக்குமோ என்னமோ? ராக்ஷஸ யுத்தம் மேல்நாட்டில் நடக்க ஆரம்பிக்கப் போகிறதா என்ன? குளிர் காலம் விலகினவுடன் அடுத்த மாதம் யுத்த நெருக்கடி விலகி வெள்ளையர்கள் பேய், பிசாசுபோல் யுத்தம் நடத்தப் போகிருர்களா' மேல்நாட்டு நாகரீகம் அழிந்துவிடுமோ, சண்டை இந்தியாவிற்கும் பரவுமோ என்ற கவலையில் ஆழ்ந்தேன். இந்த கவலையில் ஆழ்ந்திருக்கும்பொழுது டாக்டர் ரங்காச்சாரியாரைப் பற்றி எழுதமுடியவில்லை.

* * *

டாக்டரைப் பற்றி நான் என்ன சொல்லப்போகிறேன். எனக்குத் தெரிந்ததை ஓர் முன்னுரையில் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். அதன் மொழி பெயர்ப்பு சென்ற வாரம் "பாரதமணி"யில் வெளியாகிவிட்டது.

டாக்டர் கல்வியில் தேர்ச்சியடைந்தவர். அவர் பார்க்காத புஸ்தகங்கள் கிடையாது. ஊக்கத்துடன் மானிட வாழ்க்கையின் நுட்பங்களையும் கவனிக்கும் திறமையுள்ளவர். அவர் சம்பாஷணையில் ரசமான குட்டிக் கதைகளும், துணுக்குகளும், விகடங்களும் பல உள என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் அவைகளை அனுபவித்ததில்லை. இவைகளை அனுபவித்தவர்கள் யாராவது அவைகளை ஒன்று சேர்த்து "பாரதமணி"க்கு அனுப்பினல் அவைகளை நான் வெளியிடத் தயாராயிருக்கிறேன். ஆனல் இப்பொழுது ஒரு குட்டிக் கதையை சொல்லி முடிக்கிறேன்.

* * *

சில சமயம் வேதாந்தம் பேசுவோம் என்று சொன்னேனே.

"மணி, சுவாமி இருக்கிருரென்று சொல்லுகிருயே, எங்கு இருக்கிருர்" என்று ஒருநாள் காலையில் புன் சிரிப்புடன் என்னைக் கேட்டார்.

"உங்களைப் போலொத்த நிஷ்காம்ய கர்மா செய்பவரிடம், ஜோதி ரூபத்துடன் பிரகாசிக்கிருர்."

"ஆனல் உங்களிட மில்லையா?"

"எங்களிடமும் இருக்கிருர், டாக்டர், ஆனல் விறகு கட்டையில் தூங்கும் ஜ்வாலை போல் தூங்கி நிற்கிருர்."

"நல்ல உபமான" மென்று முணு முணுத்துக்கொண்டு டாக்டர் தலையை அசக்கி, புறப்பட ஆரம்பித்தார்.

"என்ன, டாக்டர்வாள், காரில் ஒரே கல்யாணமயமா யிருக்கிறது. வாழைப் பழம், வெற்றிலே, பாக்கு, கற்கண்டு மய மாய் நிரம்பியிருக்கிறது. எங்கேயாவது கலியாணம் சொல்ல வாங்கிக்கொண்டு போகிறீர்களா என்ன ?"

"இல்லே, இல்லே, மணி. ஆறுமாத காலமாக நான் ஒரு 'காம்ப்ளிகேடட்' கேஸை கவனித்து சிகித்ஸை செய்து குணம் செய்தேன். அவர் பிரபல பணக் காரர். அவர் இன்றைய தினம் ஊருக் குப் போகிறார். 'டாக்டர்வாள், உங்க ளுக்கு நான் என்ன செய்யப்போகிறேன். பணத்தாலும், காசாலும் என் நன்றியை காட்ட முடியுமா ? ஈடாகுமா ? நம் முடைய பழைய சம்பிரதாயத்தை ஒட்டி, கொஞ்சம், கற்கண்டும் வெற்றிலே பாக்கும் வாங்கி தட்டில் வைத்திருக் கிறேன். அதை அங்கீகாரம் செய்ய வேணும்.' என்று சொல்லி கொடுத் தார். '1500 மலேப் பழம், 10 வீசை கற்கண்டு 14 கவுளி வெற்றிலே, 1500 பாக்கு, காரில் இடமில்லே என்று' நான் சொன்னேன். 'அப்படித் தாங்கள் சொல் லக்கூடாது. என் மனது, நன்றியால் பீடிக்கப்பட்ட என் மனது, நீங்கள் இதை அங்கீகரிக்காவிட்டால், ஒரு நாளும் சமாதானமடையாது. நீங்கள் அவசியம் இதை ஒப்புக்கொள்ளவேணும்' என்று வற்புறுத்துகிறார்."

"இதோ உனக்கு ஒரு சீப்பு பழம்" என்று எடுத்து ஒரு சீப்பை என் கையில் கொடுத்தார்.

"பேஷ், சரி, சரி இந்த வாழைப்பழ கேஸ், எந்த ஜில்லா பேர்வழி ? மிகவும் சாமார்த்தியசாலியா யிருக்கிறாரே !" என் றேன்.

"நம்ப ஜில்லாதான், மணி — தஞ்சா வூர் ஜில்லா !" என்று, ஈசனருள் குடி கொண்ட புன் சிரிப்புடன் குழந்தை போல் 'அடுத்த கேஸ் காத்துக்கொண் டிருக்கிறதென்று' சொல்லிவிட்டு மறைந்து விட்டார்.

இதல்லவோ நிஷ்காம்ய கர்மா, என்று மோகமடைந்து, மெய் மறந்து கையில் ஒரு சீப்பு பேயன் வாழைப்பழத்துடன் பிருந்தாவனம் தெருவில் காலே இளம் வெயிலில் நின்று கொண்டே யிருந்தேன் —காபி ஞாபகம் வரும் வரையில் !

மணி.



உலக வர்த்தமானம்

ஆகாயம் மழைகாலத்தில் குமுறுவதுபோல் உலகெங்கும் சண்டைகாலத்தில் குமுறல் இருந்து வருகிறது. வல்லரசுகள் ஒன்றை யொன்று தெரிந்துகொள்ளாமல் தவிக்கின்றன. "எந்த புத்தில் எந்த பாம்பு இருக்குமோ" என்று ஒவ்வொரு தேசமும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருக்கின்றது; ஐரோப்பாவில்.

ரஷ்யாவின் பின்லாந்து கொள்கை இத்தாலிக்குக் கட்டோடு பிடிக்கவில்லைபோ லிருக்கிறது. வேண்டாத வெறுப்பாக சகித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் இத்தாலிய லைனரும் ஒன்று அக்கினிக்கிரையாய் விட்டதாம். இத்தாலி கோபம் எதில் காண்பிக்கப்படுமோ, தெரியவில்லை. ஆனால் இத்தாலியும் ஜெர்மனியும் நேசதேசங்களாகவே இருக்கின்றன என்று வரும் செய்திகள் கூறுகின்றன. சென்ற வாரத்தில் கூட முஸ்ஸோலினி ஹிட்லருக்கு வாழ்த்து செய்தி அனுப்பினாராம்.

பின்லாந்து சிகப்பு சைன்யத்துடன் போராடிக்கொண் டிருக்கிறது. சிகப்புப் படையை விரட்டியும் அடித்துக்கொண்டிருக்கிறதாம்.

பிரிட்டிஷ் சர்க்காரும் பின்லாந்துக்கு வேண்டிய உதவியை செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள், என்று லார்ட் ஹாலிபாக்ஸ் கூறினார்.

சென்ற வாரம் லார்ட் ஹாலி பாக்ஸ் நடத்திய சொற்பொழிவில் யுத்தப் பிரச்னையையும் யுத்தத்தின் போக்கையும் விவரமாக எடுத்துப் பேசினர். ஜெர்மனியின் அட்டூழியங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் வெளிப்படுத்தினர். ஆனால் இந்த சண்டையில் ஜெர்மனியின் பொருளாதார பலம், சென்ற மகா யுத்தத்திலிருந்ததைவிட அதிகமாக இருக்கிறது என்று கூறி, அப்படி இருந்தும் பிரிட்டன் அதைக்கண்டு சங்கை கொள்ளவேண்டியதில்லை என்று ஒவ்வொரு ஆங்கிலேயனின் மார்பையும் தட்டிக்கொடுத்து தைரியம் சொல்வதைப்போல் பேசினர். பிரிட்டன் பலமும் மிகவும் அதிகமாக விருத்தியடைந்திருக்கிறதாம். தனக்கு ஆகாரத்துக்கு வேண்டிய விளைபொருள்களை தாங்களே உற்பத்திசெய்ய, பிரிட்டன் ஏற்பாடு செய்திருக்கிறதாம். அதனால்தான் சண்டை இவ்வளவு சாந்தமாக நடக்கிறது!

சமரசப் பேச்சுகளும் சில மூலைகளில் கிளம்புகின்றன. இவ்வருஷம் முடிவுக்குள் சமரசம் ஏற்படும், என்பது பலருடைய அபிப்ராயம் என்பது ஐரோப்பாவிலிருந்துவரும் செய்திகளிலிருந்து தெரிகிறது. லார்ட் ஹாலிபாக்ஸ‍ும், சமாதானம் ஏற்படுவதற்கு, ஜெர்மனி யுத்த நஷ்டங்களைக் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று கூறுகிறார். இன்னுமொரு வெர்ஸேல்லை எதிர்பார்க்கிறாப் போலிருக்கிறது.

இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம் இம் மாதம் 26-ம் தேதி நடைபெறப் போகிறது. ஒவ்வொரு இந்தியனும் அன்று என்ன செய்யவேண்டும் என்பதை காந்திஜி கட்டளை யிட்டிருக்கிறார். "காங்கிரஸ் திட்டத்தில் சுதந்திர தினம் ஒரு வருஷாந்திரக் கொண்டாட்ட தினம். இக் கொண்டாட்டத்திற்கும் அரசியல் எதிர்ப்புக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஆகையினால் நடத்தப் போகும் கொண்டாட்டத்தை அரசியல் எதிர்ப்புக்காக என்று தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாது" என்று கூறி எல்லா கட்சியினரையும் கொண்டாட்டத்தில் ஈடுபடும்படி அழைக்கிறார் காந்திஜி. காந்திஜியின் சொற்படி வெகு விமரிசையாக சுதந்திரதினம் இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜின்னாவைப்போல் இல்லாமல் பம்பாயிலுள்ள பல முஸ்லீம் தேசியத் தலைவர்கள், முஸ்லீம் சகோதரர்களை, சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

சென்ற வாரத்தில் கூடிய காரியக்கமிட்டி ஒரு முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியது. அரசியல் நெருக்கடியை ஒழிக்க காந்திஜி மறுபடியும் ஒருதரம் வைஸ்ராயைக் கண்டு பேச வேண்டும் என்று தீர்மானித்தது. வைஸ்ராயின் பம்பாய் பிரசங்கம்தான் இதைத் தூண்டிற்று, என்று ராஜதந்திரிகள் நம்புகிறார்கள்.

காந்திஜிக்கு பூரண அதிகாரமும் கொடுத்தாய் விட்டது, இந்தியப் பிரச்னையைப் பற்றி வைஸ்ராயுடன் விவாதிக்கவும் முடிவுக்கு வரவும்.

ஆசிரியருக்குக் கடிதம்

காளிதாஸனின் முயல்

ஐயா,

"காளிதாஸனில் கை வைத்ததால்" குடிமுழுகி விட்டதுபோல் காளிதாஸதாஸர் கடிதம் எழுதிவிட்டார். சாகுந்தலம் ஐந்தாம் அங்க சுலோகத்தை நான்காம் அங்கத்தில் சகுந்தலை வாயில் திருச்சி நிலையகதார் திணித்த தவறே, காளிதாஸதாஸரின் அபிப்ராயப்படி, இவ்விதம் குடி முழுகியதற்குக் காரணம். இது எவ்விதம் தவறு என்று தெரியவில்லை. "அந்த சுலோகம் எந்த ஸந்தர்ப்பம், என்ன பொருள் கொண்டதென்று ஆராய்ந்தவர் இப்படி அச்சுலோகத்தைப் புகுத்தியதை ஒப்புக்கொள்ள முடியாது" என்று 'தாஸதாஸர்" எழுதி நிறுத்திவிட்டார். துஷ்யந்தனுக்குப் பொருத்தமாக இருக்கும் அச் சுலோகம் சகுந்தலைக்கு இன்னும் அதிகமாகப் பொருந்துகிறது. இச்சுலோகம் ஐந்தாம் அககத்திலிருப்பதற்குப் பதிலாக, நான்காம் அங்கத்தில் இருந்தால், அது வியாக்யானக்காரர்களுக்கு ஐந்தாம் அங்கத்தில் எழுதியதைவிட, காளிதாஸன் கனவிலும் கருதாத, அநேக வியாக்யானங்களை அதிகமாக எழுத இடங்கொடுக்கும்.

காளிதாஸர் ப்ராகிருதத்தில் எழுதிய வசனங்களை ஸம்ஸ்கிருதத்தில் மாற்றிப் பேசியவை ஸரி என்று ஒப்புக்கொள்ளுபவர் இம்மாறுதலுக்கு ஒரு ஆக்ஷேபனையும் கூறக்கூடாது. மேலும் 'காளிதாஸதாஸர்' ஒரு பழைய மடிசெஞ்சி. தற்காலத்தை மறந்து காளிதாஸர் காலத்தையே நினைத்துக்கொண்டிருக்கிறார். இக் காலத்தில் மனைவியை "உயர்ந்த பாதி" (Better Half) என்று கூறுவதால் கணவன் "தாழ்ந்த பாதி"யாக ஆகிறான். தாழ்ந்த பாதியின் வாயிலிருந்து, உயர்ந்த பாதியின் வாயில் இந்த சுலோகத்தை திணிப்பது காலப் போக்கை அனுசரித்துத் தானே இருக்கிறது.

அம்பட்டன் வாராவதி நியாயம்

சென்னையில் "பேர்போனவைகளில்' ஒன்று அம்பட்டன் வாராவதி. இதன் பிறப்பு வளர்ப்பு மிக விசித்திரமானது. "ஹாமில்டன் ப்ரிட்ஜ்" என்ற ஆங்கிலப் பெயருடன் பிறந்து பிறகு சென்னை வாசிகளின் சக்தியால் அம்பட்டன் வாராவதியாகத் தமிழில் மாறி, "பார்பர்ஸ் ப்ரிட்ஜ்" (Barber's Bridge) என்று ஆங்கிலத்தில் புனர் ஜன்மம் எடுத்தது.

இதுவரை சாதாரண "மேயராக" இருந்த சென்னை மேயருக்கு இப்பொழுது 'Worshipful' என்ற பட்டம் கிடைத்திருக்கிறது. இதை சேலத்திலும் அனுஸரித்திருக்கிறார்களாம். மற்ற ஊர்களும் இதைச் சிக்கிரம் பின்பற்றலாம். இந்த "Worshipful" என்ற ஆங்கிலப் பதத்தைச் சில பத்திரிகைகள் "பூஜ்ய" என்று தமிழில் மொழி பெயர்த்து, சாதாரண மேயரைப் 'பூஜ்ய மேயர்' ஆக்கி இருக்கிறார்கள். அம்பட்டன் வாராவதி நியாயப்படி இந்தப் "பூஜ்ய மேயரை" மறுபடியும் ஆங்கிலத்தில் ஸீரோ மேயர் (Zero Mayor) அல்லது "ஸைபர் மேயர்" (Cipher Mayor) என்று மொழி பெயர்த்துப் பழக்கத்திற்குக் கொண்டுவந்து சென்னையின் சக்தியைக் காட்டினால் ஆச்சரியத்திற்கு இடமே இல்லை.

"அதிகப் பிரஸங்கி"

ஸ்டாலின் கொள்கை

(த. கிருஷ்ணமூர்த்தி)

இவ்வாண்டு ஆரம்பத்திலே யிருந்து ஜனநாயக நாடுகளுக்கும் தனியாட்சி நாடுகளுக்குமிடையுள்ள வேற்றுமை பெருகி வருவதை ஸ்டாலின் கண்டு முக்கியமாக ஜெர்மனி தம் நாட்டைக்கோர முயலலாமெனக் கருதி அதற்குகந்த ஏற்பாடுகளைச் செய்தார். பல பொது உடமைத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டதால் ரஷ்யா பலஹீனமாயிருக்கிறதெனப் பிறர் எண்ணக் கூடுமாதலால் "ஆக்பு" தலைவர் யீ ஷேஷவை நீக்கப்பட்டு பெரிய தலைவராக நியமிக்கப்பட்டார். ஸ்தானீகர்களின் தலைவராய் ஜானுவும், அயல் நாட்டு வர்த்தகத் தலைவராய் மிகோயினும் நியமிக்கப்பட்டார்கள். ஹிட்லர் செக் நாட்டையும் மெமலையும் விழுங்கியதைக் கண்டு ஜனநாயக நாடுகள் தங்களுக்காபத்து வருமென அவைகளைப் போல் தன் கதியைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த போலந்தை அணுகி ஜெர்மனியை வளைக்க முயன்றன. அவை முன் போல் ரஷ்யாவைப் புறக்கணிக்காமல் அதன் நட்பையும் கோர முயன்றன.

எந்த நாட்டைத் தாக்கவேண்டுமோ அந்நாட்டைக் குறித்தே ஹிட்லர் அந்தந்த சமயத்தில் பிரமாதப் படுத்துவது வழக்கம். அச்சமயத்தில் பிறநாடுகளைக் குறித்து எத்தகையப் புகாரும் கூறுவதில்லை. அம்மாதிரியே டான்சிக் தகராறின்போது போலந்தைக் குறித்து மாத்திரமே எதிர்த்து வந்தார். பிரான்சினிடம் தனக்கு ஆல்சாஸ் லோரைனோ மற்ற எப்பிரதேசமோ வேண்டியதில்லை எனப் பகிரங்கமாக உறுதி யளித்தார். எனினும் ஜனநாயக வல்லரசுகள் ஹிட்லர் வார்த்தையில் மதிப்பு வைக்கவில்லை. ஆஸ்திரியாவை விழுங்கியபோது அதனை மாத்திரம் தாக்கி ஜெக் நாட்டுக்கு உறுதி யளித்தார். ஜெக் நாட்டை விழுங்கிய போதும் அம்மாதிரியே போலந்திற்கு உறுதி அளித்தார். ஆகவே போலந்து விஷயத்தில் அவர் கொடுத்த உறுதியை ஜனநாயக நாடுகள் ஏற்கத் தயாராயில்லை. அம்மாதிரி விட்டுக் கொடுத்து வந்தால் ஹிட்லர் பலம் பெருகி தங்கள் சாம்ராஜ்யத்திற்கு ஆபத்து வருமென்பதைக் கண்டு கொண்டுள்ளன. டான்சிக் நகர் ஜெர்மானியர் நிறைந்த நகரம். ஏற்கனவே ஜெர்மன் ஆட்சியிலிருந்தது. அப்படியிருந்தும் சேம்பர்லின் அந்நகர் ஜெர்மன் வயப்பட்டால் போலந்து சுதந்திரத்திற்கு ஆபத்து நேருமென்றார். ஸுடேடன் பிரதேசம் என்றும் ஜெர்மன் ஆட்சியிலிருந்ததில்லை. அப்பிரதேசம் பொஹிமியாவைச் சேர்ந்தது. அதுவும் பொஹிமியாவும் ஓரே இயற்கை அமைப்பு கொண்டது. அப்பிரதேசம் சென்றால் ஜெக் நாட்டின் சுதந்திரம் ஒழியும். எனினும் சென்ற ஆண்டில் அதன் பிரிவினைக்குச் சேம்பர்லின் ஒருப்பட்டார். பிரான்சைத் தன் வாக்கை மீறும்படி செய்தார். ஏன்? பிறர் தியாகத்தாலாவது தம் ஏகாதிபத்தியத்தை மீட்கலாமென்று. சாம்ராஜ்ய பித்து பிடித்த ஹிட்லருக்கு அது போதுமா? ஆகவே மறுபடியும் அவர் டான்சிக்கில் கிளம்பியபோது அவர் கட்சி ஸுடேடன்பிரதேச விஷயத்தை விட டான்சிக்கில் அதிக நியாயமிருப்பினும் (கிழக்கு பிரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் நேர் தொடர்பில்லாததைக் கவனிக்கவும்) பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஆபத்தெனக் கண்டு ஜனநாயக ஜெக் நாட்டைக் காட்டிக்கொடுத்த சேம்பர்லின் அதை தனியாட்சி நாடாகிய போலந்திற்கு உதவ உறுதி அளித்தார். பிரிட்டன்-ஜெர்மன் போராட்டம் வெறும் டான்சிக் பிரச்னை மாத்திரமல்லவென்றும் ஹிட்லரிசம் தொலைவதில் தங்களுக்கும் லாபமுண்டென்று முதலமைச்சர் கூறியது நோக்கற்பாற்று.

ஜனநாயக நாடுகள் தமது சூழ்ச்சிக்கு ஆளாகவில்லை என்பதைக் கண்டு ஹிட்லர் மனக்கலக்கங்கொண்டார். அச்சமயத்தில் பர்லினிலிருந்த இதாலிய ஸ்தானிகர் அட்டாலியோ அங்கிருந்த சோவியத் ஸ்தானிகரிடம் ரஷ்யாவை விரோதித்துக் கொள்ளாதிருக்கவே ருதுனியாவை ஹிட்லர் ஹங்கேரிக்கு அளித்ததாகவும் அவருக்கு உக்ரைன் ஆசையில்லை என்றும் ஆகவே இருநாடுகளும் நட்புக்கொள்ளுவது தகுதி என்றும் கூறினர். ஜெர்மனியும், ஜனநாயக நாடுகளும் தம் நட்பைக் கோரி வருவதைக் கண்ட ஸ்டாலின் அதுவே தமது பெருமையைப் பெருக்கிக் கொள்ளத் தருணமென இருவருக்கும்

உறுதியான பதிலளிக்காமல் காலம் கடத்தினர். ஜனநாயக வல்லரசுகளும் பிறவும், மூனிச்சில் பகிஷ்கரித்த ரஷ்யாவுடன் உறவு கொண்டாட பல மாதங்கள் முயலுகின்றன என்றால் மன்பதையில் அதற்குப் பெருமை அல்லவா?

ஜனநாயக வல்லரசுகள் கேட்பது ராணுவ உதவி உடன்படிக்கை. ஹிட்லர் கேட்பதோ ரஷ்யாவின் நடுநிலைமை. பின்னது லாபமாகத் தோன்றினும், ஹிட்லர் அச்சம் நீங்கிய பாடில்லை. ஆகவே எவர் அதிகமாகத் தமக்கு விட்டுக் கொடுக்கிறார்களோ; அவர்களுடன் சேருவதென ஸ்டாலின் தீர்மானித்தார். ஹிட்லர் தமது பேச்சைத் துவக்கச் சௌகரியமாயிருக்கும்படி, கூட்டுப் பாதுகாப்பு பிரசாரம் செய்துவந்த யூதர் லிட்வினுப் பதவியினின்றும் நீக்கப்பட்டார். பிரிட்டன் ரஷ்யாவுடன் ஒப்பந்தத்திற்குப் பேசி வந்தாலும் உள்ளூர இதாலியுடனும், ஜெர்மனியுடனும் சமாதானப் பேச்சை விடவில்லை. ஹட்ஸன்-வோல்டாட் பேச்சு ரஷ்யாவிற்கு இருக்கக் கூடிய கொஞ்ச நம்பிக்கையையும் போக்கிவிட்டது. எனவே இறுதியாக ஸ்டாலின் ஹிட்லருடன் வர்த்தக உடன்படிக்கையும் பின்னர் அனுக்கிரமிப்பு ஒப்பந்தமும் செய்துகொண்டார். பிரிட்டனுடன் செய்துகொண்டிருந்தால் அதற்கு ராணுவ உதவி செய்யவேண்டியிருப்பதுடன், ஜெர்மனியும் ஜப்பானும் அதனை இருபுறத்திலிருந்து தாக்கக்கூடும். அவ்வச்சம் மறைந்தவுடன் ஹிட்லர் முன்போல் பொது உடைமையைக் குறித்து பெரிதும் பேசுவதற்கும் முடியாது போயிற்று. பால்டிக் நாடுகள் யாவும் ரஷ்யாவின் செல்வாக்குக்கு உட்பட்டன. உக்ரைன் பிரச்னை எழுந்திருக்க, போலந்திலுள்ள உக்ரைன் பாகம் ரஷ்யாவிற்குக் கிடைத்தது. எவ்வாறு ஹிட்லர் ரத்தம் சிந்தாமல் ஆஸ்திரியா, மெமல், ஜெகோசிலோவேகியா முதலியனவைப் பெற்றாரோ, அவ்வாறே இன்று ஸ்டாலினும் குருதி கொட்டாமல் பிரிட்டன்—ரஷ்யா சுதந்திரக்காப்பு உறுதியை எதிர்த்த பால்டிக் நாடுகளைத் தம்வசம் திருப்பிவிட்டார். இனிமேல் அவை மூலமாக ஹிட்லர் தலையிடாதிருக்க அங்குள்ள ஜெர்மனியர்களையும் வெளியேற்ற ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். ஸ்டாலின் ஜனநாயகநாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு யுத்தத்தில் இறங்கியிருந்தால் இத்தனை லாபங்கள் கிடைத்திராதென்பதிடன் அதுவே தருணமென டிராட்ஸ்கி ஆட்களும் பழய ஜாரை ஆதரிப்பவர்களும் கலகத்திற்கு எழக்கூடும். ஆகவே ஸ்டாலின் போக்கு அவர் நாட்டைக் குறித்தவரையில் நல்லதே.

புதிதாக ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டாலும் அந்நாட்டிற்கு ரஷ்யா ராணுவ உதவி செய்யாதென நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம். ஆனால் ஜெர்மனிக்கு வேண்டிய மூலப் பொருட்களைக் கொடுக்கலாம். ரஷ்யா தானிய சேகரிப்பு திட்டப்படி பல மூலப் பொருட்களை ஏராளமாய் சேர்த்து வைத்திருப்பதுடன் விளைபொருட்களையும் பெரிதும் பெருக்கியிருக்கிறது. ஆனால் தன்னை எவராவது தாக்கினால் வேண்டியிருக்குமென்று அது ஜெர்மனிக்கு அதிகம் கொடுக்காதிருக்கலாம். போரில்லாதவரை ஹிட்லர்பலமே மேலோங்கியிருக்கும். யுத்தகாலமாகிய இன்று ஸ்டாலின் பலமே ஓங்கியிருக்கிறது. அவர்போலந்தை ஆக்கிரமித்தும், ஜனநாயக நாடுகள் அவருடன் போருக்கு எழவில்லை. அவரும் ஹிட்லரும் ஒன்று சேர்ந்தால் தங்கள் நிலைமை மோசமென்பதைக் கண்டு ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொருவராகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கண்டு கொண்டிருக்கின்றன. முக்கியமாக ரஷ்யாவை விரோதித்துக்கொண்டால் இந்தியாவின் நிலைமை மாறலாம். இந்திய சுரண்டலை விடாதிருக்கவே இத்தனை நாட்களாகச் சர்வாதிகாரிகளுக்குச் சேம்பர்லின் விட்டுக்கொடுத்த தியாக மெல்லாம் வீணாகிவிடும். ஆகவே முக்கியமாகப் பிரிட்டன இப்போது ரஷ்யாவை விரோதித்துக்கொள்ளாது. அதனை ஸ்டாலினும் அறிந்துள்ளார். ஆகவே, அவர் முதலில் தமது பலத்தைப் பெருக்குவதிலேயே அக்கரை கொண்டுள்ளார். சிறிய நாடுகள் தம்மைக் கண்டு அஞ்சாதிருக்க அவைகளிடம் தாம் ஒத்துழைப்பையே கோருவதற்கு அடையாளமாக இன்று வில்னுபிரதேசத்தை லிதுவேனியாவிற்கு விட்டுக்கொடுத்துள்ளார். அம்மாதிரியே பின்லாந்திற்குக் கரிலியாவில் பிரதேசம் கொடுப்பதாகவும், கிழக்கு பால்டிக் கடலில் வேறு வல்லரசு ஆதிக்யம் கொள்ளாதிருக்க அதனிடமிருந்து சில தீவுகளைக் கேட்கிறார். ஆகவே ஸ்டாலின் போக்கு ரஷ்யாவிற்கு நன்மையையே பயப்பதாகும். ஜனநாயக நாடுகளின் போக்கைக் கண்டு வேறு வழியில்லாமலே ஸ்டாலின் சுயநலக்காரராக விளங்குகிறார்.

(355-ம் பக்கம் பார்க்க)

வறுமையுள்ளம்

(கு. பா. வேங்கடாசலம்)

ஓட்டைக்குடிசையிலே—ஓர்
ஒன்பது ஆண்டுப் பையன்
வாட்டும் வெயிலொளியில்—உள்ளே
வதங்கிக் கிடந்தானம்மா!

உடுக்கவேட்டியில்லை—ஒரு
ஒட்டுக் கோவணந்தான்
குடிக்க கஞ்சியில்லை—எலும்புக்
கூடாயிருந்தானம்மா!

பசியால் படுத்திருந்தான்—அதை
பார்க்க சகிக்கவில்லை—
விசித்து அழுவதற்கும்—அவன்
உடம்பிலே சக்தியில்லை.

சற்றுநேரம் பார்த்தான்—ஒன்றும்
சரிப்படவேயில்லை
வற்றியுலர்ந்த காலால்—வீதி
வழிச் சென்றானம்மா!

எங்கிருந்தோ அவன்—ஓர்
இட்டிலி வாங்கிவந்தான்
அங்கிருந்த நாய்தான்—அதை
அபேஸ் பண்ணிற்றம்மா!

அன்பு கனிந்த கண்ணால்—சிறுவன்
கண்டு சிரித்தானே—நாய்
தின்பதைக் கண்டதுமே—அவன்
சிந்தையில் மகிழ்ச்சிகொண்டான்.

தன்னலம் பார்க்கவில்லை—பையன்
தரித்திரம் நோக்கவில்லை
பிறவுயிர் காப்பதலே—அவன்
பசியை மறந்துவிட்டான்.

அந்த வீடு

(மாலதி)

அன்று கோவிலில் ஜானகியைக் கண்டேன். ஓடிவந்து என் கையைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கினாள். அப்பா! என் தோளை வலியெடுத்து விட்டது. அவள் சந்தோஷம் என்னைக் கண்டதாலே. மோகம் "நீ எங்கிருக்கிராயடி, எப்போ வந்தே? இந்த ஊருக்கு, உன்னைப் பார்த்து ரொம்ப நாள் ஆச்சு இல்லையா? ராமு பிறந்தபோது பார்த்தேன். ஆறு வருஷமாறதடி. உங்காத்துக்காருக்கு என்ன வேலையடி?......" என்றாள்.

நான் சொன்னேன் பதில்: (சிறு வயது சினேகம் இது. அண்டை அயலில் உள்ளவர்களைப்பற்றி நினைவில்லாமல் போகும்படி. நெடுநாள் பிரிந்த உயிர்த்தோழிகள்) "அவர் இங்கே லயனில் இருக்கார். அடையவளைஞ்சான் வீதியில் இருக்கோம். சுற்றிலும் 'காம்பவுண்ட்' சுவர் எழுப்பி சிறு தோப்பு மாதிரி இருக்கே அதில்......நீலக் கட்டிட வீட்டிற்கு எதிரில."

"என்ன? நீலக்கட்டிட வீட்டிற்கு எதிரிலா? ஏன் வேறு வீடே இல்லையா?"

"என்ன ஜானகி...அந்த வீட்டிற்கு ஏதாவது கெடுதல் உண்டா! சொல். திடுக்கிட்டாப்போல் கேட்கிறாயே..."

"உம். அதற்கொன்றும் கெடுதல் இல்லை."

"பின்னே என்னவாம் சொல்லேன்..." என்று ஆரம்பித்தேன்.

"என்னமோ, போ மோகம், மனதில் உள்ளதை யாரிடம்தான் சொல்லுவேன் இருந்தாலும்......"

"ஊம் போட்டுண்டே யிருக்கயே, ஜானகி! உள்ளதைச் சொல்லேன். என்னிடம் எதை மறைக்க வேண்டும்? நெடுநாள் நாம் பிறிந்து விட்டதாலேயே அன்பு அழிந்து விடுமா என்ன? ஏன்! கண்ணீர் விடுகிறாய்! தெய்வ சன்னிதானம். யாராவது பார்க்கப் போகிறார்கள். பயித்தியமே! என்ன இது? குழந்தை போல்."

ஜானகி கண்ணைத் துடைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தயக்கத்துடன் சொன்னாள்: "மோகம்! அந்த நீலக் கட்டிடத்தின் மேல் நான் மோகம்கொண்டு விட்டேன்—பதியுடன் கூடிய நான். அவரது ப்ரீதியின் எல்லை காணாத நான். அவரறியாது அவர் பிணிப்பை விலக்கிவிட இருந்தேன். பாபத்திற்காளாகினேன். ஆனால் படுகுழியில் விழவில்லை. நரகவேதனையை நன்றாய் அனுபவிக்கிறேன். அதைப் பரிகரிக்கும்படிதான் தினமும் அம்பிகையை வேண்டுகிறேன். என்னவா? அந்த தோப்பில்தான் ரகு குழந்தையாய் இருக்கும்போது வந்தோம். என் புருஷன் குணம்தான் உனக்குத் தெரியுமே! யாரையும் நம்புவது; பேதமில்லாமல் பழகுவது. இதிலெல்லாம் வந்த தீவினைதான் எனக்கு. இல்லாவிட்டால்... இது நேரிட்டிருக்குமா? அதையும் சொல்ல முடியாது. பேதை புத்தி; பெண்மையின் லக்ஷணம். அவ்வளவு தான் சொல்லலாம்—சொல்றேன் கேள். நீலக்கட்டிடத்தில் ஒரு சுந்தர புருஷன். ஒருதரமா சொல்லலாம், மோகம். பல தடவையும் வர்ணிக்கலாம். பார்த்தால் தெரிந்துகொள்வாய். நான் சொல்வதென்ன? அச் சுந்தர புருஷன் இவர் சினேகிதன் ஆனான். வீட்டிற்கு சகஜமாய் வருவான். நானும் அவர்களுடன் சேர்ந்து சம்பாஷிப்பதுண்டு. அவனுடைய வார்த்தைகள் கேட்கத் திகட்டாத தெள்ளமுதம். அத்தனை சாதுர்யமாகப் பேசுவான். சூதுவாதில்லாத நிஷ்கபடன். படித்தவன்; பணக்காரன்; இளைஞன்; மணமாகாதவன்; இன்னம் என்ன வேண்டும்? என் மனதை

அவனுக்குப் பறிகொடுத்தேன்...பாழும் மனம்! அன்று முதல் ஒவ்வொரு தினமும் படும் வேதனை சொல்ல சாத்யமா? ஏதோ ஒன்றிரண்டு சம்பவத்தை மட்டும் கூறி விடுகிறேன்.

"சாதாரணமாக அவன் வருவான், பேசுவான்; அவர் வெளியில் சென்றாலும் அவன் வந்துகொண்டிருப்பான். அவனுக்குத் தடையாதுமில்லை அவன் வதனம் அவர் சுபாவம் இரண்டும் என்னை வாட்டின. அவனிடம் பேசிக்கொண்டேயிருந்தேன். ஹா! என் ஹ்ருதயம் பட்டபாடு! என் தேகம் நிலைகொள்ளாது தவித்தது. அந்த உணர்ச்சி! அந்த சம்பவம்! அதை எப்படிச் சொல்வேன்! நீயும் பெண் தானே. ஆரம்பத்தில அனுபவித்திருப்பாய். இதைவிட என்ன சொல்லவேண்டும். என் ஆவலை விருத்தி செய்வதுபோல் இருந்தது அவன் வார்த்தைகளும். அன்று என் மனப்புண்ணிற்கு ஆகாரம் அளிக்கும் தினம்போலும். அதை முடிவு செய்தேன். ஆனல்....அன்று ஏனே அவர் ஆபீஸிலிருந்து வந்துவிட்டார். 'அவர் ஏன் வந்தார்?' என்றிருந்தது எனக்கு. ஹூம், என்ன ஆர்வம் அவர் வெளியிலிருந்து வரும்போது எனக்கு இருக்கும்! அப்படிப்பட்ட நான் அவர் வந்துவிட்டாரே என வெறுப்புற்றேன். 'டிபன்' தயார்செய்ய முடியவில்லை. மனம் நிலைகொள்ளாது தவிக்கும்போது இகா வேலைகளுக்கு மூளையில் இடமேது? —ஒரு வகையாகச் செய்தேன். அவர் 'அவனுக்கும் கொடேன்' என்றார். அவன் இது வரை என் வீட்டில் தண்ணியும் அருந்தியதில்லை......இருந்தும் அன்று அவனுக்கு அளிக்கப்போரேன்......அது ஒரு அளவிலாத ஆனந்தமாய் இருந்தது எனக்கு. அவன் வேண்டாமென்றுதான் மறுத்தான். அதிக வற்புறுத்திச் சாப்பிடும்படி சொன்னர் அவர். அவன் என் பக்கம் திரும்பி 'ஹல்வா வெகுஜோர்' என்றானே அப்போ என் ரத்தக் கொதிப்பை என்னவென்று சொல்வேன். அசட்டுப் புன்னகை செய்தபடி நின்றிருந்தேன்... அதை ஒன்றையும் அவர்கவனிக்கவில்லை. கபடமற்ற சாது. அவனும் என்ன கண்டானே? இருவரும் எழுந்து வெளியே சென்றனர்.

"ஏன் சென்றான்! தவியாய்த் தவித்தேன். குழந்தையின் கத்துதலையும் செவி சாய்க்காமல், கல்லாய்ச் சமைந்து விட்டேன்....

"இரவு போஜனம் முடிந்து படுத்தேன். மாசி மாதச் சந்திரிகையின் ரம்யமான இரவு அதுவும் என்போன்ற உணர்ச்சியிவீடுபட்டவர்களுக்கோர் 'நல்' இரவுதான் அது. என் கூந்தலின் புஷ்ப வாசனையும் என் வேதனையும் மனக்கோட்டையும், என்னை தூங்கவிடவில்லை. அவரும் குறட்டை விட்டார். குழந்தை தெய்வீகமாக நித்திரையிலாழ்ந்திருந்தது.

"பதினொன்றடித்தது மணி. அக்கம் பக்கம் ஒருவரும் இல்லை. அது அதிக ஆள் நடமாட்டம் இல்லாத இடமல்லவா என் பதை திடம் செய்துகொண்டேன். எது மீளாத படுகுழியோ அதைத் தேடிப்புறப்பட்டேன். இரண்டடி வைத்தேன். அவர் முனகும் சப்தம், நெஞ்சு படபடவென்றது; திரும்பினேன். இல்லை நான் எண்ணிக்கொண்டேன் அப்படி. அடிமேல் அடி வைத்து சந்தில் நுழைந்து 'சன்ன'லில் எட்டிப் பார்த்தேன். விளக்கு எரிகின்றது. இன்னம் அவன் நித்திரை செய்யவில்லை. மனம் பூரித்தேன். ஆனல் திகில் ஒரு உலுக்கு என்னை நிற்கவிடாமல் தள்ளியது, ஏனே? தவறுதல் செய்யப்போகும் உள்ளம். அதனல் தானே? இருக்கும். அதை யார் லக்ஷியம் செய்வது. இந்த மனே நிலையில் சுற்றிலும் உள்ள மல்லிகை வாசனை. அன்று புது மணத்துடன் திகழ்ந்தது எனக்குமட்டும்தான்.

"அவன் புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தான். ஏடு திருப்பும் சிறிய ஓசை ஒன்றைத்தவிர நிச்சப்தமாகவே இருந்தது. கோரமாயிற்ற. குழந்தை அழுமே...உடல் நடுக்கம்; உள்ளக் கொதிப்பு; 'கள்ளக்' காதல். ஆமாம் அதுவேதான். திடம் செய்தேன் மனதை. அவன் என்ன நினைப்பான்! அதை மறந்தேன். என் சுபுகலம் அது. வெட்கம் அறியவில்லை. யோஜித்தேன்.

"ராஜா...என்றேன் ஒலியற்ற குரலுடன். திடுக்கிட்டுத் திரும்பினான் அவன் சப்தம்வந்த திசை நோக்கி. வெளிச்சத்தில் இருப்பவன் அவன். இருட்டில் ஒருத்தி அதிலும் நான் இருப்பேன் எனத் தெரியுமா? பீதியுடன் பார்த்துவிட்டு உட்கார்ந்தான்...அதேசமயம் எதிர்ப்புறமிருந்து 'பால் கொண்டுவரட்டுமா?' என்ற குரல யாழின் இசைபோல் ஒலித்தது. அவள்யாராய் இருக்கலாம்?என் கோட்டை இடிந்தது. இன்னொருவர் இருக்குமிடத்தில் என் மனோபீஷ்டம் நிறைவேறுமென்பது நிச்சயமா? இல்லை எனத் திரும்பினேன். அந்த இருபதடி நடப்பதற்குள் எனக்கு சகிக்கமுடியாத வேதனை. எண்ணாயிரம் தேள் கொட்டியதுபோல் என் ஹ்ருதயத்தை வதைத்தது.

"அவருடைய அமைதியான தூக்கம்!. அதைக் கண்டேன் நான். இழைக்க இருந்த மகா பாபத்தை நினைந்து அவர் அருகில கண்ணீர் விட்டேன். சாந்தியில்லை.

"பொழுது விடிந்தது. புள்ளினம் கூவின. மறுபடியும் மறுபடியும் இதை அனுபவித்துக்கொண்டு அங்கு இருப்பது பிசகு அவனைப் பார்த்துக்கொண்டு. அதற்காக அவரிடம் ஒரு கற்பனை கட்டிச் சொன்னேன். 'உடனே காலி செய்ய வேண்டும். இங்கே ஒரு தேவதை வாசமாம், நேத்துச் சொன்னாள் லீலா; அதுதானோ என்னவோ: இரவு பாதி ராத்திரியிருக்கும். நான் விழித்தபோது வீதியில் படுத்திருக்கிறேன். பிறகு பயத்துடன் உள்ளே வந்தேன். உங்களை எழுப்பலை எனக்கு ரொம்ப பயமா இருந்தது.' அவர் நம்பினார். உடனே காலி செய்தோம் வீட்டை. 'இன்னம் அவன் நினைவு' மோகம்; அதுவே யில்லை. அவனை நினைத்தாலே பரவசமாகிறதடி மனம். இதுதான் கதை...உனக்கேன் சொன்னேன் என்றால் அவனைப் பார்த்த பேர் யாரும் மோகிப்பார்கள் என்பது என் நிச்சயம். அதனால்தான் உனக்கும் ஏச்சரிக்கிறேன். அவன் கபடமில்லாத குணவான்தான். ஆனால் அவன் அழகு, அப்பா, பேதைப் பெண்களின் மனதை உருக்கவே, சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஆயுதம்தான்? என்ன சொல்வேன்......"

"நன்றாயிருக்கு ஜானகி.......... ஐயோ பாவம்! உன்னைப் பார்த்தால் பாவமாய்த்தான் இருக்கிறது. இருந்தாலும் திடசித்தமுள்ளவர்களுக்கு எந்த அழகும் ஒன்றும் செய்யாது." என்று நீட்டினேன்.

"மோகம் என்னைப்பற்றிய எல்லாவற்றையும் உன்னிடம் கொட்டிவிட்டேன். உன் கணவனிடம் சொல்லி விடாதேடி. மோகம்—இன்று இரவு எனக்கு இதே வேதனைதான். போனது என் தலைவிதி. நான் அனுபவிக்கவேண்டிய தண்டனை அவனால். ஆனால் நீ திடசித்தமென்று சொல்லுகிறாயே அதை நான் நம்பவில்லை, என்னதான் சொல் அவன் அழகு. அதை நீ பார்த்தால், எனக்குச் சொல்லும் புத்தியை நீ உதறித் தள்ளுவாய்...வசீகரிக்கும் திவ்ய தேஜஸைக் கண்டு நீயா நானா? எல்லோரும்தான் பறிகொடுத்து நிற்கவேண்டும் மனதை. எதற்கும் எச்சரிப்பது நல்லதுதானே."

"ஜானகி, நான் வேற்றுப் புருஷர்களுடன் பேசுவது கிடையாது என்பது உனக்குத் தெரியாது. என் கணவர் பிறரை நெருங்க விடமாட்டார்...ஆனதால் நான் இவ்வித கஷ்டங்களுக்குள்ளாக நேரிடாது. பிற புருஷனைக் கண்டு பேதமில்லாது பழகுவதுதான் ஆபத்திற்கிடம். ஆனதால் நான் எங்கிருந்தாலும் என் மனக்கோட்டைக்கு பங்கம் ஏற்படாது. இருந்தாலும் கொஞ்சநாள் இருந்துவிட்டு, வேறிடம் பார்க்கிறேன். ஜானகி அதையே நினைத்து ஏங்கி வருந்தாதே. என்ன செய்வது? உன் கற்பின் மகிமை கெட்டுவிடும் அதே நினைவால்."

"கெடுவதென்ன இருக்கிறது! மனதால் நினைத்தாலே மகா பாவிதானே நான். ஆனால் அவர் அறிந்துகொண்டு இகழ்ந்து ஒதுக்கவில்லை. அவ்வளவுதான்...."

"தெரியாமலா! சஞ்சலமுள்ளது பெண்கள் புத்தி யென்பார்கள். சஞ்சல புத்தி பெண்களின் பிறப்பு. எதேச்சை அவர்

களைக் கெடுத்துவிடும் என்பது பெரியோர்களின் எண்ணம். இப்போ எதற்கும் எதேச்சை வந்து இழிவுக்கு இடம் தேடி வருகிறது. இதைத்தவிர கண்ட பலன் என்ன ?"

"நன்ருய்ச் சொன்னுய் மோகம், நான் படும் வேதனை போதும். என்னை என் கணவன் எதேச்சைப்படி விட்டது......

ரொம்பநாழி ஆய்விட்டதடி. போய்வரேன். அவர் வந்து விடுவார்..."

"நானும் போய்வரேன். ஞாபகமிருக்கட்டும். கவலைக்குமட்டும் இடம் கொடாதே. உடம்புகெட்டுவிடும். ஊம்" என விரைந்து வீடு சேர்ந்தேன் அந்த வீட்டைக் காலி செய்து விடவேண்டும் என்னும் எண்ணத்துடன்......

(350-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற மகாயுத்தத்தின் போது மேற்கு அரங்கத்தில் ஜெர்மன் தாக்கல் பலமாயிருக்கும்போதெல்லாம் ரஷ்யாவைக் கிழக்கே ஜெர்மனியைத் தாக்கும்படி நேச தேசத்தினர் வற்புறுத்தினர். அதற்கு அது தயங்கும் போதெலலாம் பொருளுதவி செய்வதில்லை. அவ்வாறு அதனைத் துன்புறுத்தியும் அது கிழக்கே அவதிப்பட்டபோது நேச தேசத்தினர் மேற்கு அரங்கத்தில் ஜெர்மனியை நெருக்குவதில்லை. அதனை ரஷ்யா இன்றும் மறக்கவில்லை. அதனுலேயே ரஷ்யா கிழக்கரங்கத்தில் சீக்கிரத்தில் தோற்றதென ஒரு ஜப்பானிய ஆசிரியர் கூறுகிருர். சோவியத் ஆட்சி ஏற்பட்டதும் பிரிட்டன் அதனை ஒழிக்க ஜார் ஆட்களுக்கு உதவியதை மறக்கவில்லை. சோவியத் ஆட்சி நிலைபட்டும் பிரிட்டன் பல ஆண்டுகளாக அதனை அங்கீகரிக்கவில்லை. கன்சர் வேடிவ் அரசாங்கம் லண்டனிலிருந்த போதெல்லாம் முந்திய அரசாங்கத்திற்கும் சோவியத்திற்குமிருந்த தொடர்பு குறைந்தும், பாதிக்கப்பட்டும் வந்தது. சேம்பர்லின் பாராளுமன்றத்தில் ரஷ்யாவே ஒப்பந்தத்தவக்கத்திற்குக் காரணமென்று கூறிவந்ததையும், அன்ஞர் மியூனிச்சில் பகிஷ்கரித்ததையும் (ஜெக் நாட்டுடன் உதவி ஒப்பந்தமிருக்கும்போது), ஒப்பந்தம் செய்ய மந்திரி எவரையும் அனுப்பாமல் உள்ளூர சர்வாதிகாரிகளுடன் சமாசமாக அவர் போகவிரும்பியதையும், தன் யோசனைப்படி சமாதான மகாநாட்டைக் கூட்ட மறுத்ததையும் சேம்பர்லின் அரசாங்கத்தில் லிபரல்களும், தொழிற்கட்சியினரும் அவரை நம்பி பதவிவகிக்க மறுத்து வருவதையும் ஸ்டாலின் அறிந்தே நடுநிலைமை வகிக்கத்தீர்மானித்து விட்டார். அது ரஷ்யாவிற்கு நன்மையே.

கைராட்டை

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி)

வெயில் தகித்துக்கொண்டிருக்கிறது. தெருவில் ஒரு ஜீவப் பிராணியின் நடமாட்டமுமில்லை. பெண்மக்களும் காரியங்களை முடித்துக்கொண்டு ஓய்வு எடுத்துக் கொள்ளும் பகற்பொழுது.

சாரதா மட்டும் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் அரும்ப, ஓர் பெருத்த இயந்திரக் கல்லின் முன் அமர்ந்து மாவரைத்துக் கொண்டிருந்தாள். வியர்வைத் துளிகளுடன் கண்ணீர்த் துளிகளும் கலந்து வழிந்துகொண்டிருந்தன. வீட்டில் அனைவரும ஆழ்ந்த நித்திரையி லிருக்கின்றனர். சாரதாவுக்கோ இனி இந்த உலகத்தில் சுகமென்பது கிடையாது. ஏன்? அவள் மிகப் பயங்கரமான விதவைக் கோலத்துக்காளாகி விட்டாள். நல்ல யௌவனம் பளபளவென்று பிரகாசிக்கும் அவள் கண்களில் ஒருவித பரிதாபம் கலந்திருந்தது. ஒவ்வொரு அவயவமும் பூர்ண காந்தி பெற்று விளங்கிற்று. அந்தோ! அந்த வெள்ளைப்புடவையும் அவளுக்கு ஒரு விதத்தில் அழகாகவேயிருந்தது. இப்பேதை இவ்வுலகில என்ன சுகத்தை அனுபவித்தாள்? ஐந்து வயதில் அவளை ஒரு சிறுவனுக்கு மணமுடித்தனர். பத்தாம் வயது நடக்கையில் அவளது சிறு கணவன் சுரத்தில் மாண்டான். என்ன கொடுமை! என்ன சமூகம்! பத்து வயது நிரப்பாத பச்சிளங் குழந்தையை விதவைக் கோலத்துக் குள்ளாக்கி மூலையில் உட்கார வைத்து, அவள் வாழ்நாட்களை யெல்லாம் பாழாக்கும் பயங்கரக் கொள்கை எப்போது நம் நாட்டை விட்டு அறவே ஒழியும்?

சாரதா அழுது அழுதே எத்தனை நாட்களைக் கழித்திருப்பாள்? கிராமத்தில் பிறந்த அவளுக்கு ஓய்வு ஏது? காலை நான்கு மணிக்கு எழுந்திருப்பவள் உழவு மாடுபோல் நாள் முழுவதும் உழைத்துவிட்டு இரவு பதினொரு மணிக்குப் படுப்பாள். வியாதிக்கார விதவைத்தாய் அண்ணா, மன்னி, அண்ணாவின் குழந்தைகள் இவ்வளவு பேரையும் சாரதாதான் கவனிக்கவேண்டும். மன்னி ஒரு காரியம் செய்யமாட்டாள். சாரதாவை எப்போது பார்த்தாலும் அதிகாரம் பண்ணிக் கொண்டேதான் இருப்பாள். அண்ணாவோ கேட்கவே வேண்டாம். பெண்டாட்டி சொல்லுக்கு மறு பேச்சே கிடையாது மேலும் சாரதா விதவை. அவளுக்காக இரங்குபவரும் உண்டா?

மகா உத்தமியான சாரதா ஒரு வார்த்தையும பேசாமல் நகைமுகத்துடன் உழைத்துக்கொண்டிருந்தாள். மன்னி பண்ணுகிற அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல. "காலைப்பிடி, கையைப்பிடி" என்றெலலாம் அவளுயிரை வாங்கிவிடுவாள். சிவனே, என்று யார் என்ன சொன்னாலும் அதைச் செய்வாள் சாரதா.

அவளை வேலை வாங்குவதோடு நில்லாமல், "இந்த மொட்டச்சி மூஞ்சியில் முழித்தேன். காலில் அடிபட்டது. இந்த மொட்டச்சி கண்பட்டு என் குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்துவிட்டது." என்றெல்லாம் சுடு சரங்களைப் போல வசை மாரிகள் பொழிவாள் மன்னி.

சாரதா பாவம் தன் தாய்க்காக சகல கஷ்டங்களையும் பொறுமையோடு சகித்து வந்தாள். தாய் இல்லாவிட்டால் அன்றைக்கே அவள் தற்கொலை செய்துகொண்டிருப்பாள்.

சாரதாவின் தாய் ஒரு க்ஷயரோகி. சாரதாவின் கஷ்டங்களைக் காணக்காண அவளது கிழப் பிராணன் துடித்துக் கொண்டிருந்தது. அந்தக் கிழவி படும் கஷ்டமோ சொல்லத் தரமன்று. பிள்ளை

யைப் பெற்றதற்கு வசவும் திட்டுந்தான் அவளுக்குக் கிடைத்தது. "இந்தக் கிழ முண்டை எப்போது சாகும்? இதற்கு எப்போது இழவு எடுப்பேன்" என்று தினம் ஒருமுறை சொல்லாதிருக்கமாட்டான் அவளது ஏகபுத்ரன்.

சாரதாவுக்குத் தன் தாயார் படும் துன்பத்தைக் காணச் சகிக்கவில்லை. தன்னாலியன்றவரையில் தாய்க்கு பல விதத்திலும் உதவி செய்து வந்தாள்.

இயந்திரத்தில் மாவரைத்துக் கொண்டிருந்த சாரதா ஏதோ ஒருவித சப்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு மாவரைப்பதை நிறுத்தினாள். பக்கத்தறையில் அவள் தாய் "லொக் லொக்" என்று இருமிக் கொண்டிருந்தாள். சாரதா சடக்கென்று எழுந்து தாயிடம் சென்று "அம்மா உனக்கு என்ன வேண்டும்? உடம்பு என்ன செய்கிறது" என்று பரிவுடன் கேட்டாள். அவளது தாய் மீனாக்ஷி திணறிக்கொண்டே "அம்மா சாரதா! என் வயிற்றில் ஏதோ சங்கடம் செய்கிறது. என்னைக் கொல்லைப்புறம் அழைத்துப் போ" என்றாள். சாரதா மெதுவாக மீனாக்ஷியை நடத்தியழைத்துக் கொண்டு போனாள். மீனாக்ஷிக்கு வயிற்றுப்போக்கு அதிகமாயிற்று. வர வர எழுந்து நடக்கவும் சக்தியற்றவளானாள். பிள்ளையும்நாட்டுப் பெண்ணும் ஏன் என்று கேட்கவில்லை. அந்தோ! இப்படியும் ஒரு கல்நெஞ்சமா?

பொழுது ஏற ஏற மீனாக்ஷியின் பிராணனும் ஒடுங்க வாரம்பித்தது. சாரதா அழுத வண்ணம் அருகில் உட்கார்ந்திருந்தாள். மீனாக்ஷி, சாரதாவை அணைத்துக் கொண்டு "சாரதா, என் அந்திகாலம் நெருங்கிவிட்டது. நீ அனாதையாகி விட்டாய். சாரதா, இனி உன் பாடுதான் கஷ்டம். ஏதாவதொரு சன்மார்க்கத்தில் உன் மனதைச் செலுத்து..." இவ்வளவுதான் அவளால் பேச முடிந்தது. திக்குமுக்காடினாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அவ்வளவுதான்.

சாரதா கோவென அலறினாள். இவ்வுலகில் தனக்காகப் பரிந்துபேச ஒருவருமில்லை யென்பதை அப்போதே உணர்ந்தாள். பக்கத்தறையில் பேச்சுக் குரல் கேட்டது. "சனி ஒழிந்ததுபோல இருக்கிறது. காலை, பாலில் நான் பேதி மருந்தை அதிகமாகக் கலந்து கொடுத்தது நல்லதாகப் போயிற்று" என்றாள் மன்னி. "அப்படியா நீதான் கெட்டிக்காரியாச்சே" என்றான் அண்ணா.

இந்த வார்த்தைகள் சாரதாவின் செவியில் விழுந்தன. "ஆ" வென்ற சப்தத்துடன் கீழே விழுந்து மூர்ச்சையானாள். எவ்வளவு நேரம் நினைவற்றுக் கிடந்தாளோ? மறுபடியும் விழித்துப் பார்க்கையில் தாயின் பிரேதம் நடையில் போடப்பட்டிருந்தது. சாரதா கதறி யழுதாள். தமையனை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. பிரேதம் எடுத்துச் செல்லப்பட்டது. எல்லோரும் நதிக்கரையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தனர்.

வரும்போது சாரதா ஒரு பெருங் கூட்டத்தைக் கண்டாள். ஒரு பெண்மணி, "சகோதர, சகோதரிகளே, உங்கள் கிராமத்தைச் சீர்திருத்துங்கள். நாட்டோடு ஒத்து உழையுங்கள். பால்ய விதவைகளின் வாழ்க்கையைப் பாழாக்காதீர்கள்" என்று தீனமானகுரலில் பிரசங்கம் செய்துகொண்டே போனாள். அவள் பின்னால் பல பெண்கள் "தேசத்திற்கே உழைக்க சென்மமெடுத்தோம்" என்று பாடிக்கொண்டே சென்றனர். இதைக்கண்ட சாரதாவின் முகத்தில் என்றுமில்லாத பிரகாசமுண்டாயிற்று. சரேலென்று கூட்டத்தில் பாய்ந்தாள். "பாரதமாதாவுக்கு ஜே" என்ற சப்தம் வானைப்பிளந்தது. அந்த சப்தத்தில் சாரதாவின் குரலே ஓங்கி யொலித்தது.

இப்போதெல்லாம் சாரதா இயந்திரத்தின் முன்னால் உட்காருவதில்லை. கைராட்டை முன்னால் அமர்ந்து புன்முறுவல் பூத்த வதனத்துடன் நூல் நூற்பதில் தன் பொழுதைக் கழிக்கிறாள்.

அந்த ராட்டை அவள் வாழ்வை மாற்றி அவளுக்குப் புத்துயிரளித்தது.

வேலையில்லாதவன்

"அமுதன்"

சுந்தரமய்யர் ஓர் பழங்காலப் புலி. அவருக்குத்தான் 1905-வது வருஷத்து மெட்ரிகுலேஷன் என்று சொல்லிக்கொள்வதில் ஓர் தனி ஆசை. அந்தப் படிப்பு இப்பொழுதிருக்கும் எம். ஏ யைவிட ஒருபடி மேலென்றே இப்பொழுதும் சொல்லிக்கொள்வார். இதுகூட அவ்வளவு ஆச்சரியமில்லை. அந்த காலத்தில் பாடமாய் வைத்திருந்த "தாம்ஸன் தேச சரித்திரத்தி"லிருந்து, பிரசித்தி பெற்ற 'பக்ஸார் யுத்தத்தை' தயக்கமன்னியில் ஜலப்பிரவாஹமாய்ச் சொல்லும் பொழுதுதான் எல்லோரும் ஆவென்று வாயைப் பிளந்து கேட்பார்கள். "இப்பொழுதிருக்கும் பையன்கள் திண்டாடுகிறார்களே. நான் மெட்ரிகுலேஷனில் கடைசிப் பரிக்ஷை எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே இம்பீரியல் பாங்கு குமாஸ்தா உத்தியோகத்திற்கு உத்திரவு வந்துவிட்டதென்று" கூறிப் பெருமையடித்துக்கொள்வார்.

அவருடைய ஏகபுத்திரன் சிவராமன் ஓர் பி. ஏ. இருந்தும் அவனுக்காக எந்த உத்தியோகமும் காத்திருக்கவில்லை! 'இடமில்லை' என்று எழுதித் தொங்கவிட்டிருக்கும் காரியாலயங்களிலெல்லாம் உட்புகுந்து வேலையிருக்குமாவென்று துருவிப் பார்த்தான். 1935ல் யார் வேலை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். இம்பீரியல் பாங்கிலேயே ஒரு வேலை தகப்பனாராலேயே சிபார்சு செய்ய முடியும். ஆனால் அந்த ஆபீஸில் அவனுக்கு வேலைசெய்யப் பிடிக்கவில்லை. ராஜாங்க ஊழியனுக்க் காலத்தைப் போக்கப் பிடிக்கவில்லைபோலும்! இதனால் தகப்பனுக்கும் தனயனுக்கும் அடிக்கடி வாக்குவாதமும் சண்டையும் நடக்கும். தென்றல் முற்றிப் பெருங்காற்றாகும். அதற்குமேல் இருவரும் இரண்டு மூன்று மாதங்கள் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்வது கிடையாது.

"காலில் ஒரு கட்டையைக் கட்டிவிட்டால் தானே சம்பாதிக்கணுமே, குடும்பத்தைக் காப்பாத்தணுமேன்னு தெரியும்," என்று ஒருநாள் காமாக்ஷி அம்மாள் சுந்தரமய்யரிடம் கூறினாள். கலியாணநாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சுந்தரமய்யர், பங்குனியின் முதல் பாதியிலேயே ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் ஓர் மாட்டுப் பெண்ணையும் வீட்டில் குடியேற்றினர். தம்பதிகள் அந்நியோன்னியமாக வாழ்ந்தார்களென்பதைக் கூறுவது மிகையே. இருந்தாலும் தென்றல் காற்றிலும் சிறு கிளைகள் முறிவதே போல அவர்களிடையில் சிற்சில சமயம் துக்கடாச் சண்டைகள் உண்டாவது வழக்கம். ஆனாலும் அவர்களுடைய குதூகலம் நாளுக்குநாள் விருத்தி யடைந்தே வந்தது.

"அம்மா என்ன சொல்றா?" என்று வெளியே அலைந்துவிட்டு வந்த சிவராமன் தங்கமணியைக் கேட்டான்.

"வெடுவெட்டியா ஏன் உட்கார்ந்திருக்கணும் என்றுதான் சொல்றா" என்றாள்.

"பின் என்ன செய்யவேண்டுமாம்?" என்று கோட்டைக் கழற்றிக்கொண்டே கேட்டான்.

"எனக்கென்ன தெரியும், அப்பாவை பிள்ளைன்னு கேட்கணும்" எனக் கூறிச் சிரித்துக்கொண்டே கோட்டை வாங்கி மாட்டினாள்.

அவன் அதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை.

தங்கமணி "நீங்கள் தான் போய்க் கேளுங்களேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் கேட்கிறதற்கு உன்னை யார் கேட்டார்" "அப்பையங்கார் சத்திரத்திற்குத் தாத்தய்யங்கார் பொர்சா?" என்று கூறி அவள் கன்னத்தில் பளாரென்று ஓர் அறை விட்டான். அடித்த அடியில் நான்கு விரல்களும் பதிந்துவிட்டன. கண்களில் ரத்தம் ஏறிற்று. எவ்வளவு அடக்கியும் கண்ணீர் பொல பொல வென்று உதிர்ந்தது. தற்செயலாக உள்ளே வந்த காமாக்ஷியம்மாள் "ஏண்டி அழறே" என்று கேட்டாள். "இல்லை அம்மா, நிலைப்படியில் இடித்துக்கொண்டேன்" என்று கூறிச் சமாளித்துக்கொண்டாள். "உனக்குத் தலையிலும் ஒரு கண் வைக்கணும், குனிந்துபோகக் கூடாதா" என்று கூறிவிட்டுச் சென்றாள். இதைக்கேட்ட சிவராமன் திடுக்கிட்டான்.

வெகு நாட்களாகச் சிவராமனுக்கு ஓர் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆவலிருந்தது. பத்திரிகை ஆரம்பித்து பிரிட்டனையும் காங்கிரஸ் எதிரிகளையும் வாட்டு வாட்டென்று வாட்டவேண்டுமென்று அவனுடைய விருப்பம். இப்பொழுது அவனுக்கு எங்கும் வேலை அகப்படாததினால் தன்னுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்யலானான். தங்கமணியும் உதவிசெய்வதாக வாக்களித்தாள். அவளுடைய பணம் பாதியும், பாதி தகப்பனாருடைய பணமும் போட்டு "முரசொலி" என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தான். வேலை தேடப்போன கம்பெனிகளிலும் சினிமா கம்பனிகளிலும் சென்று, கெஞ்சிக் கூத்தாடி ஏகப்பட்ட விளம்பரங்களை வாங்கிவந்து பத்திரிகையை அழகுபடுத்தினான். பத்திரிகை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் பொது ஜனங்களுடைய ஆதரவு வேண்டாமா? "ஒசிப் பத்திரிகை வாங்கி வாசிப்பதில் நம் இந்தியர்களை வெல்ல எவராலும் முடியாது" என்று சிவராமன் அடிக்கடி சொல்வான். இது போதாதென்று விளம்பரங்களுக்குப் போட்டி. "அந்தப் பத்திரிகை, என்ன சார், ஒரு பத்திரிகையில் சேர்த்தியா" எனக் கூறித் தலையை தடவிக்கொண்டு விளம்பரங்களை அடித்துப்போக எவ்வளவு பேர்வழிகள் இருக்கிறார்கள்! பத்திரிகை ஆரம்பித்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் கம்பெனிகளிடமிருந்து அம்பு பாய்வதேபோல "இம்மாதத்துடன் எம்முடைய விளம்பரங்களை நிறுத்திவிடவும், பிரசுரித்தால் நாங்கள் ஜவாப்தாரிகளல்ல" என்று கடிதங்கள் வந்து குவிந்தன. பத்திரிகை நஷ்டத்திலேயே வேலை செய்துவந்தது. தங்கமணி தன்னாலான உதவி எதுவோ அதைச் செய்துவந்தாள். தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று நினைத்து பத்திரிகையை நிறுத்திவிட்டான்.

மறுபடியும் வேலையில்லாத் திண்டாட்டந்தான். பத்திரிகை நின்றுபோன சங்கதி தெரிந்தது. அவருக்குக் கோபம் வந்துவிட்டால் கேட்க வேண்டுமோ? "உதவாக்கரை, என்ன திருட்டுத்தனம் செய்தானோ, பணத்தை என்ன செய்தானோ, அயோக்கியப்பயல். வீட்டில் காலடி வைக்கட்டும் சொல்றேன்..." என்று இரைந்து கொண்டிருக்கும்பொழுது சிவராமன் உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் சுந்தரமய்யர் ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பரபரவென்று மாடிக்குச் சென்றுவிட்டார்.

"தங்கம் என்ன நடந்தது" என்றான் சிவராமன்.

"சங்கலி எங்கேன்னு கேட்டார், நான் மழுப்பினேன். நீங்கள்தான் வாங்கி வித்திருப்பேள்னு வசா" என்று கண்ணீர் ததும்பக் கூறினாள்.

"என்னை என்ன செய்யச் சொல்ற, வஞ்சனையில்லாமல் நானுந்தான் அலைகிறேன்," என்றான்.

"அப்பவே அப்பா சொல்றத்தைக் கேட்டிருந்தா, இப்பொழுது இம்பீரியல் பாங்கில் வேலையிலிருக்கலாமோன்னோ" என்று கூறினாள்.

"சரி, சரி, நான் செய்தது தப்புதான், அப்பொழுதே நான் உன்னைக் கேட்

டிருக்க வேண்டுமல்லவா, என்மேல் தப்பு தான் அம்மா, பரமதேவதை."

"ஏன் இப்படி என் பிராணனை வாங்கு கிறீர். உங்க நன்மைக்குத்தானே அப்பா சொன்னு, வரவர உங்கள் நடத்தை எனக்குக் கூட கட்டோடப் பிடிக்க வில்லை.

"என்னைக் கண்டால் அப்பனுக்கும் பிடிக்கவில்லை, ஆயாவுக்கும் பிடிக்கவில்லை, உனக்கும் பிடிக்கவில்லை. நான் எங்கே யாவது ஆற்றில் குளத்தில் விழுந்து சாகி றேன்."

"ராம, ராம, ஏன் இந்த ஆபாசமான வார்த்தைக ளெல்லாம் சொல்றேள்" என்று கூறிக்கொண்டே அவன் வாயைப் பொத்தினுள். அவளுடைய கண்கள் கலங்கி நின்றன.

இரவு ஒன்பது மணியிருக்கும். இன் னும் சிவராமன் வீட்டிற்கு வரவில்லை. தங்கமணி உள்ளுக்கும் வாசலுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள். அலைந்த அலுப்பினுல் ஓர் மூலையில் உட்கார்ந்தவள் அப்படியே தூங்கிவிட்டாள். மணி பத் தடித்தது. சிவராமன் உள்ளே நுழைந் தான். காலடிச் சப்தத்தைக் கேட்ட தங்கமணி திடுக்கிட்டெழுந்து பாபா வென்று இலைபோட்டுப் பரிமாறினுள். சிவராமன் எதையோ யோசித்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தற்செயலாக அங்குவந்த சுந்தரமய்யர் சிவராமனைக் கண்டதும் கோபம் பொங்கி யது. "அய்யர்வாளுக்குப் பத்து பதி னேருமணி வரையிலும் வெளியில் என்ன வேலையோ?" எனக் கசந்த தொனியில் கேட்டார். சிவராமன் பதில் கூறவில்லை. "காது கேட்கிறதா, இல்லையா என்று கேள்டி துரையை" என்று தங்கத்தை நோக்கிக் கூறினர். அவள் இருகொள்ளி யில் அகப்பட்ட எறும்புபோலத் தவித் தாள். "அய்யர்வாளுக்கு நான் மனுஷ ஞைத் தோணவில்லையா? இவ்வளவு இறு மாப்பிருந்தால் இந்த வீட்டில் இருக்க சரிப்படாது. நின்றுவிட்டுத் திரிந்து விட்டுவர, கோட்டு ஒன்று, சட்டை பொன்று..." என்று அடுக்கிக்கொண்டே சென்றுர். கொஞ்ச நேரம் பொறுத் துப் பார்த்தான். அதற்குமேல் அவ ஞல் பொறுக்க முடியவில்லை. இலையி லுள்ள சோற்றை எடுத்து விசிறி எறிந் தான். கையலம்பிவிட்டுத் தன் அறைக்கு நேரே சென்றுன். சிறிது நேரத்திற்குள் தன்னுடைய பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். இதைக் கண்ட தங்கம் பிரமித்துப்போய் அவ னைத் தடுத்தாள். ஆனல் அவன் அவளைக் கீழே தள்ளிவிட்டு மாய இருளில் மறைந் தான். சுந்தரமய்யரும் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். இவ்வளவு தூரம் நடக்கு மென்று அவர் அறிந்திலர்.

இரண்டு வருஷங்கள் ஒருவருக்கும் அறிவிக்காமல் உருண்டு சென்றன. வயற் காடுகளில் காலைப் புதுமணம் வீசிற்று. பச்சைப் பயிர்களின் நடுவில் இளங்காற்று தவழ்ந்து விளையாடியது. ஓங்கிவளர்ந்த தென்னை மரங்களின் உச்சியை சூரிய கிரணம் பளிச்சென்று பிடித்தது. அச் சமயம் வயவரப்பின் வழியே ஒருவர் கொண்டைக்கழியைச் சுழற்றிக் கொண்டு நடந்து வந்தார். எதிரேவந்த முருக சாம் பான் அவரைக் கண்டதும் கிளை வரப்பில் ஒதுங்கி நின்று "ஆண்டே தெண்டங்க" என்று ஓர் கும்பிடு போட்டான்.

"ஏண்டா முருகா! 'மேலபம பள்ளம்' எவ்வளவு காணும்?" என்று கேட்டார்.

"மாவுக்கு இருவது காணுஞ்சாமி" என்று வினயமாகப் பதில் கூறினன்.

"முருகா நம்ம 'தங்கத் தோட்டத் தில் பறித்த பழங்களை ரயிலில் ஏற்றி யாய் விட்டதா? உனக்கு அதைப்பற்றி தெரியுமா?" என்று கேட்டார்.

"பத்துமணி கூடுசிலேயே ஏத்தியாய் விட்டதே, நீங்க கொடுத்த ஒரு டசன் சாத்துக்குடி ஆரஞ்சையும், மாதளம் பழத்தையும் ரயிலய்யாவிடம் கொடுத் தேன். அவக உங்களைக் கேட்டதாகச் சொன்னுக சாமி, சும்மா சொல்லக் கூடாது, நம்ப 'கந்தாகுடி' முன்னே யெல்லாம் பேர் ஊர் தெரியாமே இருந்

தது சாமி. இப்போ எங்கே போனாலும் 'கந்தாகுடி மாம்பழம், கந்தாகுடி மாதளம்பழம், கந்தாகுடி பேரிக்கா, கந்தாகுடி ஆரஞ்சு'ன்னு பறக்கிறாங்கா. நம்மவூர் நிலக்கடலைக்கும், துவர அரிசிக்கும், எள்ளுக்கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் எல்லாம் நான்முந்தி நீமுந்தின்னு போட்டி போடராங்கோ. நீங்க வந்தது மொத எங்கவூட்டி லெல்லாம் லச்சுமி கூத்தாடரா ஆண்டே. ஒங்க புண்ணியத்திலே நாங்க வவுறு நிறைய திங்கறஞ்சாமி, ஒரு கொரையுமில்லே," என்று மூச்சு விடாமல் அடுக்கிக்கொண்டே சென்றான். "நான் என்னடா செய்தேன், எல்லாம் கடவுள் செயல்" என்று புன்சிரிப்புடன் கூறினார். "ஆண்டே ஒண்ணே ஒண்ணு கேக்கணும்னு ரொம்ப நாளா ஆசை. ஆண்டேக்குக் கண்ணாலம் ஆயிடுத்தா," என்று சிரித்துக்கொண்டே கேட்டான். அவர் முருகனை சாந்த முகத்துடன் ஒரு தரம் பார்த்து "ஆயிடுத்து" என்று மெதுவாகக் கூறிவிட்டு, வேகமாக நடக்கலானார். வழி நெடுக யோஜித்த வண்ணமாகவே சென்றார். கண்களிலிருந்து கண்ணீர்த் திவலைகள் ஓர் புல்லின் மேல் விழுந்து தொங்கின.

மத்தியானம் மணி இரண்டிருக்கும். சிவராமய்யர் என்று கூப்பிட்டுக் கொண்டே கந்தங் குடி மிராசுதார் சுப்பையர் உள்ளே நுழைந்தார். "வாங்கோ, வாங்கோ" என்று சொல்லிக்கொண்டே "ஏ கந்தா இந்தக் கூடையைப் பார்சல் செய்துவிட்டுவா, பணந்தரேன், 'பெடடு'ன்னு போடச் சொல்லு. என்று கூறிவிட்டு, சுப்பையர் பக்கம் திரும்பி "என்ன முடிவு செய்தீர்" என்று கேட்டார். "தங்கத் தோட்டம் 'சுந்தர தோட்டம்' உள்பட, 'யமபள்ளம்' பதினஞ்சுமா, 'கைலாஸ குண்டு' பதினஞ்சுமா, 'பிடாரி குளம்' பதினெட்டுமா, எல்லாம் விலைபேசி ஒரு முடிவுக்கு வந்தாய்விட்டது. நீங்கள் சொன்னதுபோல்தான். இன்னிக்கியே சாஸனம் பண்ணிவிடலாம்," என்றார். "ரொம்ப சந்தோஷம், கொஞ்சம் ஆகாரம் பண்ணிவிட்டு போகலாமோன்னோ?" என்று கேட்டுக்கொண்டே சுப்பையரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார் சிவராமய்யர்!

தம்பு செட்டித் தெருவில் 'ராம கிருஹத்தில் ஓர் கூடையுடன் ஓர் ஆள் புகுந்து, 'சுந்தரய்யர், சுந்தரய்யர்' என்று கூப்பிட்டான். வீட்டுக்குள்ளிருந்து சுந்திரமய்யர், காமாக்ஷியம்மாள், தங்கமணி, மூவரும் ஓடிவந்தனர். சுந்தரமய்யர் வந்த ஆளுக்கு ஒரு அணா கொடுத்துவிட்டுக் கூடையை வாங்கிக்கொண்டார்.

" தாத்தா, ஏக்கு, ஏக்கு " என்று மழலைச் சொல்களால் கூறிக்கொண்டு வந்தான் மூன்று வயதுக் குழந்தை சந்திரசேகரன். "எல்லாம் நோக்குத்தாண்டா," என்று அவனை யெடுத்து அணைத்துக் கொண்டார். அவருள்ளத்தில் பற்பல உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன.

கந்தங்குடி சந்திரா கிருகத்தின் பின்புறத்தின் ஓர் தோட்டம். நாவல் எழுதும் ஆசிரியர்கள் சித்தரிக்கும் சித்திரம் அதனிடத்திலிருந்துதான் கடன் வாங்கினரோ என ஐயுறும் வண்ணமிருந்தது அத் தோட்டம். அங்கே உலாவிக்கொண்டிருந்த ஓர் ஆடவனும் ஒரு ஸ்திரீயும் நந்தவனத்தின் அழகை அதிகப்படுத்தினார்கள். "என்னை விட்டுவிட்டு இவ்வளவு வருஷமா இருந்தேளே, நான் மரமா மட்டையா?" என்று கேட்டாள் அவள். "இல்லை தங்கம், இதெல்லாம் கடவுள் செயல், இல்லாவிட்டால் இந்த அந்தஸ்துக்கு நான் வந்திருப்பேனா?" என்றார் சிவராமய்யர். "இனிமேல் என்னை விடமாட்டேளே" என்று கூறிக்கொண்டே சிவராமன் மேல் சாய்ந்தாள். "விடமாட்டேன்" என்று அவளைத் தாங்கியவண்ணம் கூறினார் சிவராமய்யர்.

பந்தலில் ஏறி அவரைக்கால் பறித்துக் கொண்டிருந்த சுந்தரமய்யர், "அடியே" என்றார். "என்ன அடி நனி, எதுக்கு" என்று கேட்டுக்கொண்டே அவரைக்காய் பொறுக்கிக் கொண்டிருந்தாள் காமாக்ஷியம்மாள். அய்யர் கீழே இறங்கி வந்தது அம்மாளுக்குத் தெரியாது.

(364-ம் பக்கம் பார்க்க)

இரும்புப்பெட்டி

(வீ. வீ. பத்மராஜன்)

கல்யாணி கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவள். ராத்திரி, பூனையோ, எலியோ சமயல் அறையில் பாத்திரங்களை உருட்டினால், கல்யாணி நடுங்க ஆரம்பித்து விடுவாள். நடுங்கிக்கொண்டே எழுந்து தன் புருஷன் சாரங்கபாணி காதண்டைபோய் "குசு, குசு" என்று,

"திருடன்போலிருக்கு கொஞ்சம் தடியெ எடுத்துண்டு போய் வெரெட்டிட்டு வாங்கோ," என்பாள்.

"ஆமாம், வெச்சுரிக்கையே பொன்னும் வைரமும், அதெ திருடன் எடுத்துண்டு போன முழுகி போச்சோ? பேசாமே தூங்கு திருடனுமில்லே, கிருடனுமில்லே. பூனையோ, எலியோ பாத்திரத்தை உருட்டினால் மனுஷன் தூக்கத்தெ கெடுக்கரது, மூதேவி," என்று சீறி விழுந்துவிட்டு மருபடியும் நித்திரை செய்ய ஆரம்பிப்பான் சாரங்கபாணி.

ஆனால் கல்யாணியோ அதற்கெல்லாம் மசியமாட்டாள். சாரங்கபாணி எழுந்து சென்று, சப்தம் செய்தது பூனை என்பதை நிரூபித்தால்தான் கல்யாணி நிம்மதி அடைவாள்.

இந்தவிதமான நள்ளிரவுவேட்டை வாரத்தில் நான்கு முறையாவது நடப்பது வழக்கமாய் விட்டது. சாரங்கபாணியும் சலித்துவிட்டான். தினம் பூனையும் எலியும் ரகளை செய்வது இப்பொழுது அவனுக்கு சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆகையால் இரவு காற்றினால் கதவு அடித்துக்கொண்டால்கூட கல்யாணியின் திருப்திக்காக ஒருகுண்டான்தடியை எடுத்துக்கொண்டு, சமயல் அறை உக்கிரான உள் முதலிய அறைகளை சோதனையிட்டுத் திரும்புவான்.

அன்றையதினம் அமாவாசை. கடிகாரம் "டக் டக்" என்று அடித்துக்கொண்டிருந்தது. சாரங்கபாணி அப்பொழுது திடீரென்று முதல் தூக்கம் தெளிந்து எழுந்திருந்தான். மணி என்ன இருக்கலாம் என்று தெரியவில்லை. அப்பொழுது கடிகாரம் சரியாக பன்னிரண்டு அடித்தது. மணி ஓசை நின்றதும் ஏதோ காலடி சப்தம் அவனுக்குக் காதில் விழுந்தது. ரோட்டில் எவனோ "நடை-பூகம்பம்" நடந்து போகிறான் என்று நினைத்தான்.

ஐந்து நிமிஷம் கழிந்ததும், இரும்பை ராவும் சப்தம் கேட்டது. அந்த சப்தம் உக்கிரான உள்ளிலிருந்து வந்ததாகத் தோன்றிற்று. தள்ளினான் போர்வையை; குதித்தான் கட்டிலிலிருந்து. எடுத்தான் குண்டான்தடியை! அடிமேல் அடி வைத்து உக்கிரான அரையை அடைந்தான். தாளிட்டிருந்த உக்கிரான உள் கதவு இப்பொழுது

திறந்திருந்தது. 'எலெக்டிரிக்' விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. இரும்பு பெட்டிக்கெதிரில் உட்கார்ந்து ஒரு ஆசாமி சாவி ராவிக்கொண்டு இருந்தான். மனிதன் நல்ல சிகப்பு. ஒரு 'காக்கி' அரை 'டிராயர்' போட்டுக்கொண்டு, 'காக்கி'த்துணியிலேயே ஒரு சாரணன் "ஷர்ட்டும்" போட்டுக்கொண்டு, கண்ணில் மூக்குக்கண்ணாடியுடன், பரபரப்பாய் வேலை செய்துகொண்டு இருந்தான் அந்த பிரகிருதி. அவன் எதிரில் ஒரு பிடில் பெட்டியில் பல ஆயுதங்கள் காணப்பட்டன. சாரங்கபாணி மறைவில் நின்று பார்த்துக்கொண்டு இருந்தான். அவன் பயப்படவில்லை. வியப்புதான் அடைந்தான். நிஜமாகவே தான். ஒரு கொள்ளைக்காரனைக் கண்டுகொண்டிருப்பது அவனுக்கு சந்தோஷம் அளித்தது. அந்த திருடன் இன்னும் என்ன செய்கிறான் என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான். ஆசாமி ஒரு விதமாய் திரவுகோல் ஒன்றை ராவி, இரும்புப் பெட்டியைத் திறந்தான். அதன் கதவு "க்ரீச்" என்ற சப்தத்துடன் திறந்ததும், திருடனுக்கு திடுக்கென்று தூக்கி வாரிப்போட்டது. ஏன் அப்படி அவன் திடுக்கிட்டான்? "க்ரீச்" என்ற சப்தத்தாலா? அல்லது அந்த இரும்பு பெட்டியின் உள்ளடக்கத்தைக் கண்டா? திருடன் திடுக்கிட்டது சப்தத்தைக் கேட்டல்ல. இரும்புப் பெட்டியின் உள்ளிருந்த, ராமர், சீதை, லக்ஷ்மணன், குசவன், குருவிக்காரன், வண்ணான், துரை, மாடு இவைகளைக் கண்டுதான் அவன் திடுக்கிட்டது. ஆமாம், அந்த இரும்புப் பெட்டியில் இருந்தது புதுச் சேரி கொலு பொம்மைகள்தான்.

சாரங்கபாணி தண்டாயுதபாணியாய் தன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து, திருடனை விரைத்துப்பார்த்தான்.

திருடன் ஆங்கிலத்தில் "வெரிசாரி (very sorry)," என்று சொல்லிக் கொண்டே நடுங்கினன்.

சாரங்கபாணி கலகலவென்று சிரித்தான்.

"குழந்தைகள் உபத்திரவம் பண்ணுகிறார்கள். அவர்கள் உடைத்து விடாதபடி இந்தக் கொலு பொம்மைகளை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி இருக்காள் என் பெண்டாட்டி. அதற்காகவே, 'ஸ்பெஷலாய்' வாங்கினேம் இந்த இரும்புப் பெட்டியை."

"ஆமாம், பெட்டி பழய 'மாடல்' தான். சீக்கிரம் திறந்து விட்டேன். மன்னிக்கணும்," என்று ஆங்கிலத்தில் மொழிந்தார் கனம் திருடர் அவர்கள்.

"ஏது ஒரே ஆங்கிலத்தில் பொளக்கிறீரே" என்று கேட்டான் சாரங்கபாணி.

"சீமையிலே, 'பேச்சலர் ஆப் ம்யூசிக்' பாஸ் பண்ணினேன். வேலை ஒண்ணும் ஆப்படலை. பிடிலை உடைத்தெறிந்து விட்டு, அதன் பெட்டியில் கன்னக்கோல் முதலியவைகளை எடுத்துக்கொண்டு இப்பொழுது இந்த காரியம் செய்கிறேன். நாளை ஆடி வெள்ளிக்கிழமை பெண்டாட்டிக்கு எண்ணெய் வாங்க காசு இல்லை. உம் பாழாப்போன வீட்டில் ஒன்றும் கிடைக்கவில்லை," என்று வெகு துக்ககரமாய்ப் பேசினன் திருடன்.

"கொஞ்சம் இரு," என்று சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்று ஒரு ரூபாய் எடுத்துவந்

தான் சாரங்கபாணி. அதை திருடனிடம் கொடுத்து,

"ரொம்ப வந்தனம். அந்தப் பெட்டியின் சாவி தொலைந்து விட்டது. நாளைக்கு ஒருவனை கூப்பிட்டு திறக்கச் சொல்லவேண்டும் என்று நினைத்தோம். அந்த சாவியையும் கொடுத்துவிட்டு போய் வாருங்கள். 'குட்நைட்,'" என்றான் சாரங்கபாணி.

திறந்த வரையையும், பிடில் பெட்டியையும் மூடிக்கொண்டு, வந்த ஜன்னல் வழியாகவே வெளியேறினன் அந்தத் திருடன்.

(361-ம் பக்கத் தொடர்ச்சி)

"காமு, என் கண்ணே," என்று நெளித்துக்கொண்டே இளித்துக்கொண்டு அம்மாளிடம் நெருங்கினர். இவரைக் கண்டு திடுக்கிட்ட காமாக்ஷி அம்மா "ஐயய்யோ, மேலே பட்டுடப்போறேள், இன்னொரு தரம் ஸ்நானம் பண்ணுவதற்கு என்னல் முடியாது" என்று பொறுக்கிய அவரைக்காயை மடியில் கட்டிக்கொண்டு வீட்டிற்குள் சென்று விட்டாள். தாத்தா தலையைச் சொரிந்துகொண்டே அசடுவழிய விழித்தார்.



"பக்தி"யில் ஒரு காட்சி